பக்கங்கள் - 14
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
மின்னிதழ்
வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 18 ஞாயிற்றுக்கிழமை (31.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 164

சாவகச்சேரி பகுதியில்

## கெரோயினுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் 32 மில்லி கிராம் கெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது. 02

## கொரோனா 1613 ஆக உயர்வு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றிற்குள்ளானவர்களின் எண்ணிக்கை 1,613 ஆக உயர்ந்துள்ளது. 02

தேர்தல்கள் ஆணைக்குழு

# பொதுத் தேர்தலை நடத்த தயாராக வேண்டும்

## பிரதமர் மகிந்த வலியுறுத்து



(கண்டி)

பொதுத் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்த நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுக்க வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்கு தீர்வு கிடைப்பதை கோட்டாவினால் தடுக்க முடியாது



### இரா.சம்பந்தன் திட்டவட்டம்

(கொழும்பு)

எமது உரிமைகளை நாம் பெற்றுக்கொள்வதை யாராலும் தடுக்க முடியாது. ஜனாதிபதி கோட்டாபய வினாலும் தடுக்க முடியாது.

ஆயுதப் போராட்டம் பழைய கதை. அதைப்பற்றி பேசி பலனில்லை. இப்போது நாம் ஜனநாயகத்தின் அடிப்படையில், மனித உரிமைகளின் அடிப்படை 02

பாராளுமன்றப் பொதுத்தேர்தலை

## இரு தினங்களில் நடத்த தேர்தல் ஆணைக்குழு கவனம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலை அடுத்தடுத்து இரண்டு தினங்களில் நடத்துவது குறித்து தேர்தல்கள் ஆணைக் குழு கவனம் செலுத்தி வருகிறது.

நாட்டில் காணப்படும் நிலைமைக்கு அமைய தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு இணங்க இரண்டு நாட்கள் தேர்தலை நடத்தினால் மாத்திரமே அதனை உரிய முறையில் நடத்த முடியும் என்பது குறித்து ஆணைக்குழுவின் அதிகாரிகள் கலந்துரையாடியுள்ளனர். 02

## நாடு முழுவதும் இன்று ஊரடங்கு

(கொழும்பு)

**நாடு முழுவதும் இன்றைய தினம் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.**

எவ்வாறாயினும், நாளை முதல் ஜூன் 3ஆம் திகதி வரையில் அனைத்து மாவட்டங்களிலும் இரவு 10.00 மணி முதல் மறு தினம் அதிகாலை 4.00 மணி வரையில் ஊரடங்கு உத்தரவு அமுலாக்கப்படும்.

பின்னர் ஜூன் 4ஆம் மற்றும் ஐந்தாம் திகதிகளில் நாடு முழுவதும் முழுநாளும் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்படவுள்ளது.

ஜூன் 6ஆம் திகதி முதல் சகல மாவட்டங்களிலும் மீள் அறிவித்தல் வரையில் இரவு 10 02

## கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரை பொலிஸாரால் தடுத்து நிறுத்தம்!

(குப்பிழான்)

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் ஆரம்பமாகி கதிர்காமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பாதயாத்திரை சாவகச்சேரிப் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை மதியம் ஆரம்பமான கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரையின் ஒரு பகுதி புத்தூர் வீதியூடாக 02

இரண்டு முக்கிய அமைச்சுக்களின்

## இணையத்தளங்கள் மீது நேற்று சைபர் தாக்குதல்

(கொழும்பு)

பொதுநிர்வாக அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியவற்றின் இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தமிழீழ சைபர் படையணியென்ற பெயரில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக 02

## வவுனியாவில் வெடிபொருட்கள் நேற்று மீட்பு

(வவுனியா)

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் உள்ள வீட்டு காணியிலிருந்து வெடிபொருட்களை ஈச்சங்குளம் பொலிஸார் நேற்றைய 02

யாழில் 61 பேருக்கு கொரோனாப் பரிசோதனை

## முல்லை தனிமைப்படுத்தலிலிருந்த இருவருக்கு தொற்று உறுதி

(குப்பிழான்)

நேற்றையதினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 61 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதன்போது முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்திலிருந்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் இரு 02

## தேர்தல் நடத்துவதற்கான சூழல் நாட்டில் ஏற்பட்டுள்ளது

### மைத்திரிபால சிறிசேன கண்டுபிடிப்பு



(கண்டி)

நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். 02

# கற்கிடங்கு அம்மன் ஆலய பொங்கல் நடைபெறாது

## ஆலய பரிபாலன சபை அறிவிப்பு

(பனிக்கன்குளம்)

கற்கிடங்கு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பில் பொதுமக்களுக்கான விசேட அறிவித்தல் ஒன்றை ஆலய பரிபாலன சபையினர் விடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டு சுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு கற்கிடங்கு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை இடம்பெற இருக்கின்றது. அந்தவகையில் இந்த வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பில் ஆலய பரிபாலன சபையினர் பொதுமக்களுக்கான அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளனர்.

அந்த வகையில் தற்போது நாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலை மற்றும் தவிர்க்க முடியாத காரணங்கள் காரணமாக நாளை திங்கட்கிழமை மேற்படி ஆலயத்தின் வருடாந்த பெரும் பொங்கல் விழா நடைபெற மாட்டாது என்பதனையும் அன்றைய தினம் சாதாரண பூசை வழிபாடுகளும் நடைபெற மாட்டாது என்பதனையும் அனைத்து அடியார்களுக்கும் அறியத்தருகின்றோம் என குறித்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா-281)

# வான் - டிப்பர் விபத்து ஐவர் படுகாயம்

(சிலாபம்)

சிலாபம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பங்கதெனிய வெஹரகெலே பகுதியில் நேற்று இடம் பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த ஐவரும் வானில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்தவர்கள் எனவும் இவர்கள் சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனம் மற்றும் முச்சக்கர வண்டி ஆகியவற்றின் சாரதிகள் சிலாபம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஞா)

## கெரோயினுடன்...

இதில் நாவற்குழி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே கைது செய்யப்பட்டதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஞா)

## நாடு முழுவதும்...

மணி முதல் மறுநாள் அதிகாலை 4 மணி வரையில் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களுக்கும் இடையிலான போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## இணையத்தள...

தெரிவிக்கப்பட்டுகிறது.

விமானப்படை ஊடக செய்தித் தொடர்பாளர் குறுப் கப்டன் துஷன் விஜேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

சைபர் தாக்குதலுக்குப் பிறகு, இலங்கை கணினி அவசரநிலை பதிலளிப்புக் குழு மற்றும் இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்திற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இரண்டு வலைத்தளங்களையும் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஞா)

## வெடிபொருட்...



தினம் மீட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

வவுனியா ஈச்சங்குளம் - சாளம்பன் பகுதியில் உள்ள தனியார் காணியை அதன் உரிமையாளர் உழவியந்திரம் மூலம் பண்படுத்தியுள்ளார்.

இதன்போது, சந்தேகத் திற்கிடமான பொருட்கள் இருப்பதை அவதானித்து வீட்டு உரிமையாளர் ஈச்சங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த பகுதியை சோதனை செய்து பார்த்தபோது இரண்டு மோட்டார் குண்டுகளை அவதானித்துள்ளனர்.

எனினும், மண்ணில் புதையுண்டு மேலும் வெடிபொருட்கள் இருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார் நீதிமன்றின் அனுமதியுடன் குறித்த பகுதியை ஆழமாக்கி சோதனை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்தனர். (ஞா)

## பொதுத் தேர்தலை நடத்த தயாராக வேண்டும்...

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், பொதுத் தேர்தலொன்றை நிச்சயமாக நடத்தியே ஆகவேண்டும். இதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரும் தயாராகிக்கொள்ள வேண்டும். இது அவரின் பொறுப்பாகும்.

தேர்தலை நடத்தத்தான் ஆணைக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுத் தேர்தலுக்கான பணிகளுக்கு அவர்கள் தயார் நிலையில்தான் இருக்க வேண்டும். நீதிமன்றில் தீர்ப்பு வந்தவுடன், அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சி பொதுத் தேர்தலை நடத்த வேண்டாம் என எதற்காகக் கூறுகிறது என்று உண்மையில் தெரியவில்லை. நாம் எதிரணியில் இருக்கும்போது தேர்தல்களை நடத்துமாறுதான் வலியுறுத்திவந்தோம். உண்மையில், தேர்தலின் ஊடாக அரசாங் கத்தை கவிழ்ப்பது தான் எதிர்க்கட்சி களின் நோக்கமாக இருக்க வேண் டும்.

அத்தோடு, அரசாங்கம் தான் தேர்தலை பிற்போட நடவடிக்கைகளை எடுக்கும். ஆனால், இங்கு அனைத்தும் தலைகீழாகத்தான் இடம்பெறுகின்றன. இதனை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கும் தெரியும் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று.

அதேநேரம், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக நாம் தீவிரமாக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம். எம்மைப் பொறுத்தவரை இந்த விடயத்திற்கு பொறுப்பான இரண்டு, மூன்று நபரைக் கைது செய்வதல்ல எமது நோக்கம்.

இதன் பின்னணியைக் கண்டறியவேண்டும். கடந்த சில நாட்களுக்கு முன்னர், இலங்கையில் மீண்டுமொரு தாக்குதல் நடைபெறும் என முகப்புத்தகத்தில் பதிவிட்ட ஒருவரை கைது செய்து தற்போது விசாரித்து வருகிறோம். இவ்வாறு நாம் இந்த விடயத்தில் மிகவும் தீவிரமாகவே செயற்பட்டு வருகிறோம் என கூறினார். (ஞா)

## கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரை...

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தையும், இன்னொரு பகுதி நீர்வேலியூடாக கைதடிப் பிள்ளையார் ஆலயத்தையும் நேற்று முன்தினம் மதியம் சென்றடைந்தது.

இந்நிலையில் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளில் பங்கேற்ற பின்னர் பாதயாத்திரைக் குழுவினர் அங்கிருந்து தொடர்ந்தும் பாதயாத்திரை செல்ல ஆயத்தமாகினர். அப்போது அங்கு சென்ற சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய அதிகாரிகள் தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமைக் மத்தியில் இங்கிருந்து நடந்து செல்ல முடியாதெனவும், அதனையும் மீறி நீங்கள் நடந்து சென்றால் கைது செய்யப்படுவீர்கள் எனவும் எச்சரித்துத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதனையடுத்துப் பாதயாத்திரைக் குழுவினர் தமது பாதயாத்திரையை இடைநடுவில் கைவிட்டு மீண்டும் செல்வச்சந்நிதி ஆலயத் திற்குத் திரும்பினர்.

இது தொடர்பில் பொலிஸாரை தொடர்புகொண்டு கேட்டபோது, பாதையாத்திரை மேற்கொள்வதனால் எதிர்வரும் நாட்களில் ஊரடங்குச் சட்ட காலங்களில் அகப்பட்டு தொடர்ந்தும் பாதையாத்திரை செல்ல இயலுமான சூழ்நிலை காணப்படாது.

மற்றும் தற்போதையை கொரோனா காலகட்டத்திற்கு இது பொருத்தமானதாக அமையாது.

ஆனால் நீங்கள் வாகனங்களை உபயோகித்து யாத்திரையினை மேற்கொள்ள முடியுமென கூறியதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஞா-18)

## தமிழர்களுக்கு தீர்வு கிடைப்பதை கோட்டா...

யில் பயணிக்கிறோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று தனியார் வானொலி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.ஏ.சுமந்திரனின் கட்டுப்பாட்டில் வந்து விட்டது என்ற கருத்தையும் நிராகரித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கை யில்,

உண்மையின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில், சமத்துவத்தின் அடிப்படையில் எமக்கு தீர்வு கிடைப்பதை எவராலும் தடுக்க முடியாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினாலும் தடுக்க முடியாது. வடக்கு கிழக்கு எமது சரித்திர பூமி. அது எமது அடிப்படை உரிமை. அந்த நியாயமான தீர்வை அடைவதை யாராலும் தடுக்க முடியாது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கம் பற்றிய கேள்விக்கு,

ஆயுதப் போராட்டம் முடிந்த பின்னர் நாம் எல்லோரும் ஒன்றாக செயற்பட சில கருமங்கள் எடுத்தோம். அதன்படி, ஒற்றுமையாக ஒரு அமைப்பை எடுத்தோம். அந்த செயற்பாட்டை இன்றுவரை தொடர்ந்து வருகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் எமது அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்த விரும்பினார்கள். அதை நாம் வரவேற்றோம். 2009 ஆயுதப் போராட்டம் மௌனமாகிய பின்னரும், அது தொடர்கிறது. இலக்கை அடையும் வரை தொடர்வோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் பழைய கதை. அதைப் பற்றி பேசிப் பலனில்லை. அது முடிந்த விடயம். நாம் இன்று வேறு வழியில் பயணிக்கிறோம். மனித உரிமைகளின் அடிப்படையில், ஜனநாயகத்தின் அடிப்படையில், சர்வதேசத்தின் ஆதரவுடன் பயணத்தை செய்கிறோம்.

ஆயுதப் போராட்டம் குறித்த கருத்து பற்றிய கேள்விக்கு,

ஆயுதப் போராட்டத்தின் சரி பிழைகளை நாம் பேசவில்லை. இன்னொரு ஆயுதப் போராட்டத்தை நாம் விரும்பவில்லை. சிங்கள, தமிழ் மக்களிற்கு ஆபத்தை விளைவிக்கும் ஆயுதப் போராட்டத்தை நாம் விரும்பவில்லை. அதையே வலியுறுத்துகிறோம்.

ஆயுதப் போராட்டம் பற்றிய சுமந்திரனின் கருத்து பற்றிய கேள்விக்கு,

சுமந்திரன் பேசியது தனிப்பட்ட விடயம். அது பற்றி நான் கதைக்க விரும்பவில்லை. இந்த விடயங்களை பாவித்து எமது கட்சியை உடைக்க பலர் முயற்சிக்கிறார்கள். நாம் அதற்கு ஒத்துழைக்க மாட்டோம்.

சுமந்திரனின் கட்டுப்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சென்று விட்டது எனக் கூறுவது கற்பனை. அதை முற்றாக நிராகரிக்கிறேன். கட்சியின் செயற்குழு, மத்தியகுழு, பாராளுமன்ற குழு கூடியே முடிவுகள் எடுக்கிறோம். யாரும் தனிப்பட்ட ரீதியில் முடிவெடுப்பதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த தலைவரை அடையாளம் கண்டுவிட்டீர்களா என்ற கேள்விக்கு,

அது மக்களின் அதிகாரம். கட்சியின் அதிகாரம். உரிய நேரத்தில், உரியவர் அந்த பொறுப்பில் வருவார். இந்த பொறுப்பில் இருப்போமென நாம்கற்பனை செய்தோமா? தமது கடமையை உண்மையாகவும், நேர்மையாகவும் மக்கள் பணியை செய்து வந்தால், மக்கள் தமது தலைவர்களை தீர்மானிப்பார்கள்.

நான் தேசியக்கொடியை மதிக்கிறேன். தேசியக்கொடியை ஏற்கிறீர்களா, இல்லையா என்ற கேள்விகளை ஏன் கேட்கிறீர்கள்? இதெல்லாம் தேவையில்லாத கேள்விகள். இந்த கேள்விகளால் எமது சமூகத்திற்கு என்ன நன்மை? இப்படியான கேள்விகளால் எமது மகளை குழப்ப பலர் முயற்சிக்கிறார்கள். ஊடகங்களும் முயற்சிக்கின்றன. இப்படியான கேள்விகளிற்கு பதிலளித்து, அதற்கு நான் உதவலாமா? இப்படியான கேள்விகளிற்கு நான் பதிலளிக்க மாட்டேன். இப்படியான கேள்விகளை என்னிடம் கேட்க வேண்டாம் என்றார். (ஞா)

## இரு தினங்...

தேர்தல் சம்பந்தமான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்ததும் தேர்தல் நடைபெறும் தினத்தை அறிவித்து, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய தீர்மானங்களை எடுக்க எண்ணியுள்ளதாக தேர்தல் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (ஞா)

## கொரோனா...

நேற்று 55 பேர் வைரஸ் தொற்றிற்கு இலக்காகியுள்ளனர்.

வைரஸ் தொற்றிற்குள்ளான 781 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 822 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்த கடற்படையினரின் எண்ணிக்கை 388 ஆக உயர்ந்துள்ளது. 22 கடற்படையினர் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையிலிருந்த இராணுவ வீரர் ஒரு வரும் தொற்றிற்குள்ளாகியுள்ளார். (ஞா)

## முல்லை தனி...

வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்திலிருந்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 52 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்ட 8 பேர், மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஞா-18)

## தேர்தல் நடத்...

கண்டியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, எதிர்வரும் பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுனவும் பிரச்சாரத்தை முன்னெடுக்க தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் நெருக்கடியால் தேர்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் பொதுத் தேர்தலில் வெற்றியைப் பெற இப்போது அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

அத்தோடு தற்போது தேர்தலை நடத்துவதற்கான சூழல் நாட்டில் இல்லை என்ற கருத்தை தான் நிராகரிப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (ஞா)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

உ
சிவார்ப்பணம்

அன்னை எனும் ஆலயத்தில் ஆண்டவனாய் அமைந்து

2020ல் 5ம் ஆண்டு

# நினைவுதனில்

அன்னை மடியில் 25 - 02 - 1950

ஆண்டவன் அடியில் 26 - 05 - 2015



## அமரர் நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி

(ஜெகதா ஹாட்வெயர்ஸ் ஸ்தாபகரும் உரிமையாளரும்
- கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்)

திதி – வைகாசி பூர்வபக்க நவமி (31.05.2020)

- நகரா முழங்கிடவே நபோமணி ஆனவரே!
  நந்திகேஸ்வரரை நயந்து போய் அடைந்தீரே!
- நாசி கேது சாட்சியாக நயந்து மணந்த நாச்சியாரை!
  நாட்பொருத்தம் பார்த்து நாடித்தான் சென்றீரோ!
- நிதிக்கிழவன் தேரேறி நிச்சிரேயசம் பெற்றவரே!
  நிர்க்கதியாய் நிற்கின்றோம் நின் தயவு இல்லாமல்!
- நீதி வழுவா நெறிமுறையில் நியதி பூண்டு நின்றவரே!
  நீர்க்கடன் தான் செய்கின்றோம் நீர் நிறைந்த விழிகளுடன்!
- நுண்ணுணர்வு பெற்றவரே நுட்பங்கள் அறிந்தவரே!
  நுதற் கண்ணன் பாதமதில் நித்திய மலர் ஆனீரோ!
- நூனயம் பெற்றுயர்ந்து நெறிமுறையாய் வாழ்ந்தவரே!
  நூங்கர் உலகம்தான் உவப்பாய் அடைந்தீரோ!
- நெகிழம் அணிந்த ஜெகதா அம்மை தோள்சேர!
  நெஞ்சம் உவந்து நெடுந்தொலைவு சென்றீரோ!
- நேத்திரங்கள் நோகுதையா! நெஞ்சங்கள் தவிக்குதையா!
  நேத்திர வீட்சணம் செய்வீரோ! நேசமிகு எம் அம்மையுடன்!
- நைமித்திகம் தனை நவாலியூர் கணபதிக்கு! நித்தமும் செய்தீரே!
  நைவேதனம் செய்வதற்கு உம்மையே சமர்ப்பித்தீரோ!
- நொடி பயிற்றுவித்து நடை பயிற்றுவித்து நயமாய் வளர்த்தீரே!
  நொவ்விதாக எமைவிட்டு சொர்க்க வாசல்தான் ஏகினீரோ!
- நோற்பிருந்து வணங்குகின்றோம் தயை நோக்குதல் செய்வீரே!
  நோன்புக்கிரியை நோற்கின்றோம் அருளாசி வழங்குமையா!
- நௌவி போன்ற உம் மனையுடன் கனிந்து மகிழ்ந்து வாழ்ந்தீரே!
  நௌ விலேறி கங்காதீரம் கடந்து சிவனருள் பெற விரைந்தீரோ!
- அஃது நிச்சயம் கிடைத்திருக்கும் உங்களது ஆருயிர்க்கு!
  நயநந்திரன் தான் உம் அன்பு நேசன் ஆயிற்றே!

ஐயனே! கொடி வழி பெருகும் போது தங்கள் நல் அறங்களும் தொடரும் என
அக்கினிப் பிளம்பெனக் கொதித்து வழியும் விழிநீரை சாட்சியாக்கி
வாக்களிக்கின்றோம்.

(2929)

ஈர விழிகளுடன்:- குடும்பத்தினர்
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

# திருநெல்வேலி பொதுச் சந்தை நாளை முதல் வழமைக்கு

## சமூக இடைவெளியை பேணுமாறு வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பொதுச்சந்தை வியாபாரிகளுக்கான இட ஒதுக்கீடு நேற்று நல்லூர் பிரதேச சபையின ரால் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட தன் காரணமாகவும் கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதிக்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள பொதுச் சந்தைகள் அனைத்தும் மூடப்பட் டன.

இந்த நிலையில், நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பொதுச் சந்தைகளும் மீளத் திறப் பதற்கு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரினால் அனுமதியளிக்கப் பட்டது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச்சந்தை நாளை திங்கட் கிழமை மக்கள் பாவனைக்காக திறந்து விடப்படவுள்ளது. நேற் றைய தினம் நல்லூர் பிரதேச சபை யினரால் திருநெல்வேலிச் சந்தை யில் வியாபார நடவடிக்கையில் ஈடு பட்டு வரும் வியாபாரிகளுக்கான இடஒதுக்கீடு வழங்கும் பணி முன் னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச்சந்தையில் 245க்கும் மேற்பட்ட மரக்கறி வியாபாரிகள் வியாபார நடவடிக்கையை மேற் கொண்டு வருகின்றனர்.

கொரோனா தாக்கத்தின் காரண மாக சமூக இடைவெளியை பேண வேண்டிய நிலை காணப்படுகின்ற மையினால் பொதுச் சந்தைகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடு படுவோர் மற்றும் பொதுச்சந் தைக்கு வரும் பொதுமக்களுக் கிடையில் சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டிய நிலையில் இடஒதுக்கீடுகள் சுகாதார நடை முறைகளை பின்பற்றக்கூடியவாறு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஞா)

நெடுந்தீவு – குறிகாட்டுவான் இடையேயான

# படகுச் சேவைகள் நாளை முதல் வழமைக்கு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையான படகுச் சேவைகள் நாளை திங்கட்கிழமை முதல் வழமைபோல இடம்பெறவுள்ள தாக நெடுந்தீவு பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி அறிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தாக்கத்தின் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச் சேவைகள் கடந்த மார்ச் 20ஆம் திகதி தொடக்கம் இடைநிறுத்தப்பட்டன.

நெடுந்தீவு - குறி காட்டுவான் இடை யிலான படகுச்சேவைகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் வழமை போன்று இடம்பெறும். வடதாரகை காலை 8 மணிக்கு குறிகாட்டு வானிலிருந்து நெடுந்தீவு நோக்கிப் புறப்பட்டு மாலை 4 மணிக்கு மீண்டும் குறிகாட்டுவானை வந்தடையும்.

ஏனைய படகுச் சேவைகளும் வழமைபோன்று சேவையில் ஈடு படும். மேலும் கொரோனா தொற்றுக் காரணமாக சமூக இடை வெளியை பேணியே பொதுமக்கள் படகுகளில் பயணிக்க வேண்டி யுள்ளதன் காரணமாக மேலதிக படகுச் சேவைகள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஞா)


விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240


அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின்

# பூதவுடல் இன்று தீயுடன் சங்கமம்



(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல் பலத்த பாதுகாப்புடன் நேற்று முற்பகல் கொட்டகலை தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய வளாகத் துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கொழும்பில் இருந்து ஹெலி கொப்டரில் எடுத்து வரப்பட்ட அன் னாரின் பூதவுடல் நேற்று முன் தினம் வேவண்டன் இல்லத்தில் வைக்கப்பட்டது.

மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டு நீண்டநேரம் வரிசை யில் காத்திருந்து அஞ்சலி செலுத் தினர்.

இந்நிலையில், நேற்று காலை அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சர்வமத வழிபாடும் இந்து மத முறையிலான கிரியைகளும் இடம் பெற்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வருகை தந்து அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் இறுதிக் கிரியை கள் பூரண அரச மரியாதையுடன் இன்று மாலை 4 மணிக்கு நோர் வூட் மைதானத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனம் செய்யப்படவுள் ளது. (ஞா)

15 மில்லி கிராம்

# ஹெரோயினுடன் மூவர் கைது

(கரணவாய்)

15 மில்லி கிராம் ஹெரோயி னுடன் மூன்று பேர் நேற்று முன் தினம் அல்வாய் பகுதியில் வைத்து நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

34, 41, 55 வயதுகளை உடைய குறித்த சந்தேகநபர்கள் கடந்த சில காலங்களாக வடம ராட்சிப் பகுதியில்போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தமை ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தெரியவந்தது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேகநபர்கள் நீதவானிடம் நேற்று முன்னிலைப் படுத்தப்பட்டனர். (ஞா-8,60)


மீண்டும்

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும்

100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 3536


இன்று அதிகாலை 12.00 மணிநேர நிலைவரப்படி

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் | சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|
| 1,613 | 781 | 010 | 822 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 6,096,530 | 2,702,383 | 368,864 |

செயலை விதையுங்கள். பழக்கம் உருவாகும். பழக்கத்தை விதையுங்கள். குணம் உண்டாகும். குணத்தை விதையுங்கள். உங்கள் எதிர்காலம் உண்டாகும்.
– போர்ட் ஏமன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மலையகத் தமிழ் மக்களுக்கு எழுதும் அனுதாபக் கடிதம்

எம் மலையகத் தமிழ் உறவுகளுக்கு அன்பு வணக்கம்.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இழப்பினால் நீங்கள் அடைந்துள்ள சொல்லொணாத் துயர் கண்டு நாமும் மிகுந்த வேதனை அடைகிறோம்.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் உச்சிக் கதிரவன் நடுவானில் இருந்து வீழ்ந்தது போல் குறைந்த வயதில் திடீரென மரணித்தமை உங்களுக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தவே செய்யும்.

என் செய்வது. இறப்பு ஒன்றுதான் மனிதனின் பிறப்புரிமை என்றாயிற்று.

அந்தப் பிறப்புரிமையை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

அதுவே இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கமும் நியதியுமாகும்.

எனினும் மரணித்தவர் தன் வாழ்நாளில் மக்களுக்கு ஆற்றிய பணிகளால் அவரின் நாமம் இறப்பைக் கடந்தும் மக்கள் மனங்களில் நிலைபெறுகிறது.

இந்த வகையில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மலையகத் தமிழ் மக்களாகிய உங்களின் மனங்களில் என்றும் வாழ்வார் என்பதில் ஐயமில்லை.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மலையகத் தமிழ் மக்களின் மீட்பராக இருந்த அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் அன்புப் பேரன்.

அமரர் தொண்டமானின் அரசியல் வாரிசாக மலையகத் தமிழ் மக்களின் அரசியல் விவகாரங்களை முன்னெடுத்துச் சென்றவர் அவர்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் இந்த நாட்டின் மிகப் பெரும் அரசியல் தலைவர். மலையகத் தமிழ் மக்களாகிய உங்களின் வாழ்வுக்காக அவர் ஆற்றிய பணியை, அரசியல் திறத்தை யாம் சொல்ல வேண்டியதில்லை.

அத்துணை ஆற்றல்மிகு தலைவராக தொண்டமான் விளங்கினார்.

ஈழத் தமிழ் மக்களின் உரிமை சார் விடயங்களிலும் அவர் காட்டிய கருசனை என்றும் மறப்பதற்கில்லை.

இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களை பேரினவாத ஆட்சியாளர்கள் வஞ்சம் தீர்க்க நினைத்தபோது அவரைக் காப்பாற்றி இந்தியா செல்வதற்கு சௌமியமூர்த்தி தொண்டமான் உதவினார் எனும்போது அதற்குள் அவரிடம் இருந்த; எம் மீதான அன்பும் பாசமும் எத்துணை உயர்வானதென்பதை உணர முடியும்.

ஆம், அரசியல் களநிலைமைகளை சாதகமாக்கி மலையகத் தமிழ் மக்களாகிய உங்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் உங்களின் வாழ்வியலை மேம்படுத்துவதிலும் அமரர் தொண்டமான் ஆற்றிய பணிகள் உயர்வானவை.

அவரின் அத்தகைய பணிகளுக்கு பக்கபலமாக – ஓர் இளைஞனாக நின்று பணியாற்றிய அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் சமகால அரசியலில் கடுமையாகப் போராட வேண்டியவராக இருந்தார்.

இந்த நாட்டின் இனவாத ஆட்சி அதிகாரங்கள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு மிகுந்த உபாதையைக் கொடுத்திருக்கலாம்.

அவர் தன்னை நம்பிய மலையகத் தமிழ் மக்களுக்காகத் தன் இறுதி மூச்சுவரையில் பணியாற்றினார்.

அவரின் உடல் இன்று அக்கினியில் சங்கமமாகும் இவ்வேளையில், எங்கள் உறவுகளாகிய உங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# ஆயுத மோதலின் போது தனிமனித உரிமை பேணுவது மழைகாலத்தில் சேறு உருவாகுவதை தடுப்பது போன்றது

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இராணுவத்திற்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகளிற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை என ஜனாதிபதி ஊடகப்பிரிவு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

த ஹிந்து நாளிதழில் வெளியான கட்டுரையொன்று குறித்து அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

த ஹிந்து நாளிதழில் வெளியான கட்டுரையில் இலங்கையின் பல படைவீரர்கள் குறிப்பாக சிரேஷ்ட அதிகாரிகள் யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் யுத்தக்குற்றங்களில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி ஊடகப் பிரிவு, எந்த ஆயுத மோதலின் போதும் தனிநபரின் மனித உரிமையைப் பேணுவது மழைகாலத்தில் சேறு உருவாவதை தடுப்பதைப் போன்ற விடயம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் யுத்தங்களின் கொந்தளிப்பான நிலை காரணமாக சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் ஒருவர் பின்பற்றவேண்டிய தெளிவான விடயங்களை முன்வைக்கவில்லை எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இலங்கைப் படையினர் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டனர் என எந்த உத்தியோகபூர்வ ஆவணமும் நிரூபிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

எட்டு பொதுமக்களை கொலை செய்த படைவீரர் ஒருவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தமை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளமை குறித்தும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

ரத்நாயக்கவிற்கு தண்டனை வழங்குவதற்கு 13 வருடங்கள் எடுத்த போதிலும் இலங்கை நீதிமன்றம் இன்னும் நியாயமான சந்தேகங்களை கொண்டுள்ளதாகவும் இதேவேளை இலங்கை அரசாங்கம் அதிகளவான விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களிற்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளதாகவும், அவர்கள் மத்தியில்ரத்நாயக்க போன்று மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் உள்ளதாகவும் இதனால் மன்னிப்பு வழங்குவது நியாயமற்றதோ அல்லது ஒழுக்கமற்றதோ இல்லை எனவும் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# பொருத்தமில்லாத துறைகளில் படையினரை ஈடுபடுத்தி அவர்களுக்கு அவமரியாதையை ஏற்படுத்த வேண்டாம்

## சம்பிக்க ரணவக்க வேண்டுகோள்

(கொழும்பு)

இராணுவத்தினருக்கு பொருத்தமில்லாத துறைகளில் அவர்களை ஈடுபடுத்திக்கொண்டு அவர்களுக்கு அவப்பெயரை பெற்றுக்கொடுக்க வேண்டாம் என்று அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, தற்போதைய அரசாங்கம் இராணுவத்தினருக்கு பொருத்தமற்ற துறைகளில் அவர்களை ஈடுபடுத்தி சமூகத்தின் முன்னிலையில் அவர்களுக்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் பரவலின் மத்தியில் பெரும் பங்காற்றி வருகின்ற சுகாதாரப் பிரிவினருக்கு வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுகள் தடை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. எதிர்வரும் காலங்களில் அவர்களும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான சூழலை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

வெளிநாடுகளில் பணிபுரியும் ஊழியர்கள் இன்று கொரோனா வைரஸின் பரவலால் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இலங்கையில் கொரோனா வைரஸை இறக்குமதி செய்தமை தொடர்பில் அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும். அரசாங்கத்தின் கீழ் மட்டத்திலான அரசியல் இலாபம் கருதிய செயற்பாடுகளால் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதுடன், சிறைக்குச் செல்ல வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

அவர்கள் தனது குடும்பத்தின் முன்னேற்றத்திற்காகவே வெளிநாடுகளில் சென்று பணிபுரிய தேவை ஏற்பட்டுள்ளது. இவர்களே அரச வருமானத்திற்கு நேரடியாகவே பங்காற்றுபவர்கள்.

இவர்களின் பாது காப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும்.

மேலும், எமது காலத்தில் இராணுவத்தினருக்கு உரிய மரியாதையை வழங்கி வந்தோம். ராஜபக்ஷக்களின் கடந்த கால ஆட்சியில் இராணுவத்தினருக்கு பொருத்தமற்ற விடயம் தொடர்பில் பொறுப்பளித்தபோது அவர்களுக்கு கொலையாளி என்ற பட்டமே வழங்கப்பட்டது.

தற்போது சுகாதாரப் பிரிவுக்கு வழங்க வேண்டிய பொறுப்புகளை இராணுவத்தினருக்கு கொடுத்ததனால், வைரஸ் தொற்றுக்கு பலர் உள்ளாகியிருப்பது டன், பலரது விமர்சனங்களுக்கும் முகம்கொடுக்க நேர்ந்துள்ளது.

இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கும் உரிமை இல்லை. அதனால் அவர்களுக்கு ஆதரவாக நாமே முன்னிற்க வேண்டும்.

அரசாங்கத்தின் திட்டமற்ற செயற்பாடுகளினால் பாதிப்படைந்துள்ள சுகாதாரப் பிரிவு மற்றும் இராணுவத்தினர் அவர்களது உரிமைகளை வென்றெடுப்பதற்காக முன் வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல்5மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** அராலிப் பிரதேசம், செட்டியார்மடச் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார் கோவிலடி, அராலி ஐயனார் கோவிலடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலை ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** சாந்தபுரத்திலும்

**வவுனியா பிரதேசத்தில்** சாளம்பைக்குளம் ஒரு பகுதி, துட்டுவாகை ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** சீனத்துறைமுகம், வங்காலை ஒரு பகுதி, முள் ளிப்பழம், தள்ளாடி, கட லேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன் கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டய லொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், இசை மழைத்தாழ்வு ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- ❖ சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள், ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியதாகும்.
- ❖ மனித ஞானத்தைவிட கடவுளின் மடமை ஞானமிக்கது. மனித வலிமையை விட, அவருடைய வலுவின்மை வலிமைமிக்கது.
- ❖ கடவுள் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் புதிய ஆற்றலை பெறுவர். அவர்கள் ஓடுவர், களைப்படையார், நடந்து செல்வர், சோர்வடையார்.
- ❖ நீ செய்ய நினைக்கும் செயல் எதுவோ அதைச் செய். அதையும் உனக்கு ஆற்றல் இருக்கும்போதே செய்.
- ❖ உங்களுக்குள் ஒருவருக்கொருவர் மட்டுமின்றி அனைவருக்கும், எப்போதும் நன்மை செய்யவே விரும்புங்கள்.
- ❖ ஒரே எண்ணமும், ஒரே அன்பும், ஒரே உள்ளமும் கொண்டவராய்த் திகழ்ந்து, ஒரு மனத்தவராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள்.
- ❖ கடவுளிடம் அன்பு செலுத்துவோர், தம் சகோதர சகோதரிகளிடமும் அன்பு செலுத்தட்டும்.
- ❖ அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைத்த வாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள்.

# இராணுவமயமாக்கலூடாக மக்களை இறுக்கி இந்த அரசு எதனைக் கண்டுவிடப் போகிறது

## செல்வம் அடைக்கலநாதன் விசனம்



(வவுனியா)

இலங்கையின் வடபுலத்தில் கொரோனா அச்சுறுத்தலை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்தும் இராணுவமயப்படுத்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் விசனம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், வடமாகாணம் இராணுவமயப்படுத்தலுக்குள்ளாக்கப்பட்டு வருவது தொடர்பாக நாம் தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வருகிறோம்.

எனினும் இது தொடர்பில் ராஜபக்ஷ அரசு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காத நிலையில் எமது மக்களைச் சொல்லொணாத் துன்பத்திற்குள்ளாக்கி வருகின்றது.

இலங்கையின் எப்பாகத்திலும் இல்லாத அளவிற்கு இராணுவச் சோதனைச்சாவடிகளும் ரோந்து நடவடிக்கைகளும் இராணுவ நடமாட்டமும் வடக்கில் தலைதூக்கியுள்ளது. இது எமது மக்களை அச்சத்திற்குள்ளும் யுத்த மனோபாவத்திற்குள்ளும் வைத்திருப்பதற்காகவா? என எண்ணத் தோன்றுகின்றது.

தற்போது கொரோனாத் தொற்றை காரணம் காட்டி வடக்கில் மேலும் இராணுவ பிரசன்னம் அதிகரித்துள்ளது. பொலிஸாருக்கு வழங்கப்பட வேண்டிய சிவில் நிர்வாக செயற்பாடுகளை இராணுவத்திற்கு வழங்கி வடக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கவே இந்த அரசு முற்படுவதாக தோன்றுகின்றது.

இராணுவ பிரசன்னம் என்பது சர்வதேச விதிமுறைகளுக்கு அமையவே காணப்பட வேண்டும். எனினும் சர்வதேச ஒழுக்க நெறியை மீறி செயற்படும் இவ் அரசு, தமிழ் மக்களை அடக்கி சாதிக்க நினைப்பவைகளை ஈடேற்ற, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்றும் தடையாகவே இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-2-299)





## மன்னார் பகுதியில்

# பனைசார் உற்பத்தியை நம்பி வாழும் 300 குடும்பங்கள் நிர்க்கதி நிலையில்

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மன்னார் தீவுப்பகுதிக்குள் பனை உற்பத்தி சார்ந்த தொழிலை மேற்கொள்ளும் சுமார் 8 கிராமங்களைச் சேர்ந்த 300 குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்து பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த கிராம மக்கள் கூலித் தொழிலையும் விறகு வெட்டுதல், மட்டை வெட்டுதல், பனங்கிழங்கு மற்றும் ஒடியல் தயாரித்தல் போன்ற காலத்திற்கு ஏற்ற பனை சார்ந்த தொழில்களை மேற்கொண்டு தங்களது வாழ்வாதாரத்தை கொண்டு செலுத்தினர்.

எனினும் தற்போதைய நிலையில் வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்ள முடியாதுள்ளதால் அவர்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

உணவிற்குக்கூட போதிய பணம் இல்லாத சூழ்நிலைக்குள் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களால் நாளாந்தம் தயார் செய்யப்பட்ட பொருட்கள் விற்பனைக்கு தயார் நிலையில் காணப்பட்ட போதும் அவைகள் முடக்கப்பட்ட நிலையில் தேங்கிக் கிடப்பதாக கவலை தெரிவித்தனர்.

இவ்வாறு அநேக வீடுகளில் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்ய இயலாத நிலையில் காணப்படுகின்றன.

குறித்த வாழ்வாதாரத்தை இழந்து உணவிற்குக்கூட கஷ்டத்தை எதிர்கொள்ளும் 8 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது துயரங்களுக்கு கைகொடுத்து உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (5-2-285)

# தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதானால் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்துப் பேசுங்கள்

## அரசிடம் அரவிந்தன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாத்திரம் பேச்சுவார்த்தைகளை நடத்தாது, ஏனைய தமிழ்க்கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் அரவிந்தன் சண்முகராஜா தெரிவித்தார்.

கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அண்மைக்காலத்தில் அரசாங்கத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார்கள். பல்வேறு விடயங்கள் அரசாங்கத்துடன் பேசியிருக்கின்றார்கள். குறிப்பாக, கைதிகள் விடயம் தற்போது அதிகளவாக பேசப்படுகின்றது. கடந்த காலத்தில் இருந்த அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன், ஆட்சிக்கு வந்தது. அந்தக் காலகட்டத்தில், நிபந்தனைகளைக் கொடுத்து இலகுவாக, நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை இருந்தது. அந்தக் காலங்களில் பேச வேண்டியவற்றை பேசாமல்விட்டுவிட்டு இன்று காணாமல் போனோர் மற்றும் அரசியல் கைதிகள் தொடர்பில் பேசத் தேவையில்லை.

தற்போது தேர்தல் காலம் வருகின்ற காரணத்தினால், இதைப் பேச ஆரம்பித்திருக்கின்றார்கள்.

அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாத்திரமன்றி, ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கையாளக்கூடிய வகையில் செயற்பட வேண்டும்.

மறுபடியும், நாட்டை இக்கட்டான சூழ்நிலைக்குள் கொண்டு போவதென்பது, மிகவும் மோசமான ஒரு அரசியல் என நான் கருதுகின்றேன்.

இனங்களுக்கு இடையில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

மீள்குடியேற்றம், சிறைகளில் வாடும், அரசியல் கைதிகள் மற்றும் மக்களின் பிரச்சினைகளில் அரசு அதிக அக்கறை செலுத்த வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்ததென்பது பற்றி பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்திற்கு இருக்கின்றது. இந்த விடயங்களில் அரசாங்கம் அதிகம் கவனம் செலுத்த வேண்டுமென்பது எமது வேண்டுகோள் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2-104)

# முகக்கவசம் அணியாவிடின் சட்ட நடவடிக்கை

## பொலிஸ் அத்தியட்சகர்

(தருமபுரம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக முகக்கவசம் இன்றி பயணிப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் நேற்று முன்தினம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் மக்கள் முகக்கவசம் அணியாது செல்வதும் கூட்டம் கூட்டமாக நிற்பதையும் அவதானிக்கக்கூடியதாகஉள்ளது.

இவ்வாறு முகக்கவசம் இன்றி வீதிகளில் பயணிப்போரை பொலிஸார் அவதானித்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (2-5-316)

# ஐயாயிரத்தில் முறைகேடு விசாரணைக்கு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கொரோனா இடர்காலத்தில் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபாய் இடர்காலக் கொடுப்பனவில் யாழ்ப்பாண மாவட்டத்திலும் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

முறைகேடுகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கூறிய அவர், அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வழங்கப்பட்டு வரும் கொடுப்பனவில் சில கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அது தொடர்பில் முறைப்பாடுகளும் எமக்குக் கிடைத்துள்ளன. எமக்குக் கிடைத்த முறைப்பாட்டினையடுத்து இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்குமாறும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கூறப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-5-114)

# பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நிவாரணம் வழங்க டக்ளஸ் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இழப்பீடுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கடற்றொழில் மற்றும் நீரியல் வளமூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த புதன்கிழமை அமைச்சரவையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்துவிட்டன. இக்காலப் பகுதியில் இடையூறுகளுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளான தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இதுவரை நிவாரணங்கள் கிடைக்காத நிலையில் தமிழ் ஊடகவியலாளர்களும் அவர்களது குடும்பங்களும் இன்னமும் பல்வேறு அசௌகரியங்களுடனேயே உள்ளனர்.

இந்நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களது வாழ்வியல் நலன் கருதி நிவாரணங்களைத் துரித கதியில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அமைச்சரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# பல்கலைக்கழக விண்ணப்ப காலஎல்லையை நீடிக்கவும்

## இம்ரான் கோரிக்கை



(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பக்கால எல்லையை நீடிக்குமாறு, திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கல்வி அமைச்சின் முன்னாள் கண்காணிப்பு உறுப்பினருமாகிய இம்ரான் மகரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதி, பிரதமர், கல்வி அமைச்சர், உயர்கல்வி அமைச்சருக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே, இக்கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“2019 க.பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்று, பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களின் விண்ணப்பப்படிவத்தை, பாடசாலை ஆரம்பித்து இரு வாரங்களின் பின்னர் சமர்ப்பித்தால் போதுமானதென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

“எனினும், தற்போது ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் குறித்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டுமென, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதுவொரு முரணான விடயமாகும்.

“இந்த முரண்பாட்டால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புள்ளது. இந்த அரசாங்கத்தின் கல்வி சார்ந்த நிலையற்ற ஒரு கொள்கையை இது சுட்டிக் காட்டுகின்றது.

“தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் காரணமாக, மாணவர்களுக்கு இந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படலாம்.

“பாடசாலைகள் எப்போது ஆரம்பிக்கப்படப் போகின்றது என்று தெரியாத ஒரு சூழ்நிலையில், அதிபர், ஆசிரியர்களுடைய ஆலோசனைகளைக் கூட பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை மாணவர்களுக்கு ஏற்படலாம்.

“இவற்றைக் கருத்திற்கொண்டு, பல்கலைக்கழக அனுமதிக்கான கால எல்லையை நீட்டிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்” எனக் அக்கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-4)

# புலனாய்வு அமைப்புகளை ஐக்கியப்படுத்துவது அவசியம்

## கமால் குணரத்ன சுட்டிக்காட்டு



**(கொழும்பு) கடந்த ஆட்சியின் போது தனித்து செயற்பட்ட புலனாய்வு அமைப்புகளை ஐக்கியப்படுத்துவது அவசியம் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன சுட்டிக்காட்டினார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய பாதுகாப்பினைப் பேணுவதற்காக புலனாய்வுப் பிரிவினருக்கு புத்துயிர் கொடுப்பதற்கான ஜனாதிபதியின் உத்தரவின் கீழ் இது இடம் பெறுவதாக தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்தினையும் போதைப்பொருள் கடத்தல்காரர்களையும் திட்டமிட்ட குற்றச் செயல்களையும் கட்டுப்படுத்துவதில் விசேட அதிரடிப்படையினர் பங்களிப்பு அவசியமாகவுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில் விசேட அதிரடிப்படையினர் வழங்கிய பங்களிப்பைப் பாராட்டியுள்ள அவர், நாட்டைப் பாதுகாக்கும் முயற்சிகளில் விசேட அதிரடிப்படையினர் தங்களின் தொழில்சார் திறமையைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

சட்ட அமுலாக்கல் நடவடிக்கைகளிற்கு மாத்திரமல்லாமல் திட்டமிட்ட குற்றச்செயல்களிற்கு எதிராக பயிற்றுவிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் விசேட அதிரடிப்படையினரின் தேவை அதிகமாகயிருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளுக்கு அரச அச்சக கூட்டுத்தாபனம் தயார்

(கொழும்பு)

வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகளுக்காக அரச அச்சக கூட்டுத்தாபனம் தயாராகி வருவதாக அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத் தலைவர் கல்யாணி லியனகே தெரிவித்தார்.

இவ் விடயம்தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

பொதுத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணிகளுக்காக அரச அச்சக கூட்டுத்தாபனத்தை ஆயத்தமாக இருக்குமாறு தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்திருந்தது.

பொதுத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பாக தீர்ப்பு வெளியானதும் தேர்தல் இடம்பெறும் தினம் அறிவிக்கப்படும்.

அதன் பின்னர் வாக்குச் சீட்டுக்களை அச்சிட வேண்டியதன் தேவையை தேர்தல்கள் ஆணைக்குழு அரச அச்சகத் தலைமை அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியது.

அதையடுத்து குறித்த நடவடிக்கைகளுக்காக தற்போது அரச அச்சகக் கூட்டுத்தாபனம் தயாராகி வருகிறது.

அண்மையில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மூன்றில் ஒரு பங்கு ஊழியர்களை மட்டுமே பணிக்கு அமர்த்த வேண்டுமென அறிவித்த காரணத்தால் அனைத்து ஊழியர்களையும் தேவைக்கு ஏற்ப பணிக்கு அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பாராட்டு!

ஒருத்தன் ஏதாவது வேலை கிடைத்தால் நல்லது என்று அலைந்து கொண்டிருந்தான்.

ஒரு இடத்திலே அவனுக்கு ஒரு வேலையும் கிடைத்தது. அதன் பின்பு கொஞ்ச நாள் கழித்து அவனைப் பார்த்தேன்.

“இப்போது வேலையை விட்டால்நல்லது என்று நினைக்கிறேன்” என்றான். என்ன விடயம் என்று விசாரித்தேன்.

‘‘என்ன சேர் செய்வது? எனக்கு மேலே இருக்கிறவன் ஒரு பெரிய கோபக்காரனாக இருக்கிறான். எதுக்கு எடுத்தாலும் கோபப்படுகிறான். அனுசரித்துப் போறது ரொம்ப கஷ்டமா இருக்கு. அதுதான் அந்த இடத்தை விட்டு விலகிவிடலாம் என்று பார்க்கிறேன்’’ என்றான்.

இப்படி இவன் சொன்னதைக் கேட்டதும் ஏற்கனவே நான் படித்த ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. அதை அவனிடம் சொன்னேன். அது என்ன விபரம் என்றால் நியூயோர்க்கிலே ஒரு மனநல மருத்துவ நிபுணர் இருந்தார். ஒருநாள் அவரைத் தேடி ஒரு பெண் வந்தாள்.

‘‘டாக்டர் உங்களிடம் ஒரு முக்கியமான ஆலோசனை கேட்கலாம் என்று வந்திருக்கிறேன்’’ என்றாள் அந்தப் பெண். ‘‘என்னம்மா விடயம்’’ என்று விசாரித்தார் அவர்.

அந்தப் பெண் விபரத்தைச் சொன்னாள்...‘‘டாக்டர் நான் ஒரு தொழிற்சாலையிலே தலைமை அதிகாரியின் சுருக்கெழுத்தாளராக வேலை பார்க்கிறேன்’’. அந்த அதிகாரி ஒரு சிடுமூஞ்சி. எதுக்கெடுத்தாலும் கோபப்படுகிறார்.

அவருடைய கோபதாபங்களை என்னாலே சமாளிக்க முடியவில்லை. மனதுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கு. தாங்க முடியவில்லை. இரவு முழுவதும் சரியாகத் தூங்க முடியவில்லை. அந்த அளவுக்கு வேதனையாக இருக்கு. அதனாலே இந்த வேலையை விட்டு விடலாம் என்று பார்க்கிறேன். அதற்கு முன் உங்களுடைய ஆலோசனையை கேட்டுக்கொள்ளலாம் என்பதற்காக வந்திருக்கிறேன். என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டாள் அந்தப் பெண்.

அந்த நிபுணர் இந்தப் பெண் சொல்லுறது எல்லாத்தையும் பொறுமையாக, கவனமாக கேட்டுக்கொண்டார். பின்பு சொன்னார்...

‘‘அம்மா நான் ஒரு யோசனை சொல்கிறேன். அதன்படி மூன்று மாதம் நடந்துகொள். அதன்பின்பு என்னிடம் வா இராஜினாமா செய்யலாமா வேண்டாமா என்பதைப்பற்றி யோசிப்போம்’’ என்றார்.

‘‘என்ன செய்யவேண்டும் சொல்லுங்க’’ என்று கேட்டாள் அந்தப் பெண். அந்த நிபுணர் தன் யோசனையைச் சொன்னார். இதோ பாரம்மா...சிடுமூஞ்சியிடமும் சில நல்ல குணங்கள் பதுங்கியிருக்கும். அதையெல்லாம் தேடிக் கண்டு பிடித்து வாயார பாராட்டு. ஒரு நாளைக்கு ஒரு பாராட்டு என்று வைத்துக்கொள். இப்படி தொடர்ந்து செய் பார்க்கலாம் என்று சொல்லி அனுப்பினார்.

அந்தப் பெண் மறுநாள் வழக்கம் போல அலுவலகத்துக்குப் போய் சேர் உங்கள் சேட் ரொம்ப நல்லா இருக்கு என்று மனதார பாராட் டினாள். அடுத்த நாள். அவனுடைய ஆங்கில எழுத்து நடையைப் பாராட்டினாள். இப்படி தினமும் ஒரு பாராட்டு.

இப்படி பாராட்டு ஏற ஏற சிடுமூஞ்சித்தனம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்து விட்டது. மூன்று மாதம் கழித்து அந்தப் பெண் மறுபடியும் மனநல மருத்துவ நிபுணரிடம் வந்தாள்.

‘‘என்னம்மா வேலையை இராஜினாமா செய்யலாமா’’ என்று கேட்டார் அந்த நிபுணர்.‘‘அது எப்படி முடியும்’’ என்றாள் அந்தப் பெண். ஏன் என்று கேட்டார் அவர்.

‘‘நான் அவரைக் கல்யாணம் செய்யப் போகிறேன். இப்ப அவர் என்னுடைய காதலர். இதோ போட்டிருக்கிறேனே வைர மோதிரம் அது அவர் எனக்கு பரிசாகக் கொடுத்தது’’ என்று வெட்கப்பட்டுக் கொண்டே சொன்னாள்.

சிடுமூஞ்சிக்கு வந்த வாழ்வைப் பாருங்கள் சேர். கொஞ்ச நாளிலே அவர்கள் இரண்டு பேரும் கல்யாணம் செய்யப் போகிறார்களாம்.

இதுதான் நான் பேப்பரில படித்த செய்தி.

இதை என்னிடம் வந்த நம்ம ஆளிடம் சொன்னேன். அவன் கொஞ்சம் யோசித்தான்.‘‘சேர் நானும் என் முடிவை மாற்றிக் கொள்ளப் போகிறேன். இதே அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப் போகிறேன்.

எனக்கு மேலே இருக்கிறானே ஒரு சிடுமூஞ்சி... அவனை கூடிய விரைவில் மாற்றிவிடலாம் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. உங்கள் யோசனைக்கு ரொம்ப நன்றி. ஒரு மூன்று மாதம் கழித்து நானும் ஒரு கல்யாணப் பத்திரிகையோடு உங்களை வந்து சந்திக்கிறேன்’’ என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.


அது எப்படி என்றேன் ஒன்றும் புரியாமல். ‘‘அந்த சிடுமூஞ்சிக்கு ஒரு பெண் இருக்கிறாள். என்னோட படித்தவள். நான் அவரிடம் வேலைக்குச் சேர்ந்ததே அதுக்காகத்தான் சேர்’’ என்றான் அசடு வழிய!

# யுத்தம் தந்த கருக்கோள வடு

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக யுத்தம் எமது பிரதேசத்தில் வாழ்ந்த தாய்க்குலத்தினரில் கருக்கோளக வடுவினைப் பதியவைத்துள்ளது. இது தொடர்பான பெண் நோயியல் சிறப்பு மருத்துவ ஆய்வும் பெண் நோயியல் சிகிச்சைக்கான பிரத்தியேக மருத்துவ விடுதி வசதிகளும் இன்றியமையாதவை ஆகின்றது. தாய்மைக்குரிய கருப்பம் தங்கும் கருப்பையினை தொன்மையான தமிழில் கருக்கோளம் என்பர். இக்கருக்கோளம் **(Uterine)** குருதியில் உள்ள கானில் சுரப்புக்களின் **(Hormones)** செறிவினால் மாற்றமடையக்கூடியது.

ஒரு பெண் பூப்படைவதில் இருந்து கருக்கோளகத்தில் கானில் சுரப்புக்களின் தாக்கம் சந்திர மாதத்துடனாக மாறி மாறி வரும். நிலா தேய்வது போலும் வளர்வது போலும் கருக்கோளகத்தில் மாற்றங்கள் நிகழும். ஒரு பெண்ணை நிலவுக்கு ஒப்பிடுவதற்கு உடற்றொழிலியல் மாற்றமும் பூமி மாதாவின் மாற்றமும் பொருந்தும் உவமானநிலை இங்கு நோக்கத்தக்கது.

ஆயினும் அசாதாரண சூழல் மாற்றங்கள் இயற்கைக்கு மாறாக உடலில் தாக்கத்தை ஏற்படுத்தும். மனிதனின் இயல்புக்கு ஒவ்வாத மனிதாபிமானமற்ற செயல்களே அசாதாரண சூழல் மாற்றங்களாகும். கோர யுத்தமும் அவ்வாறாக அசாதாரண மனித நேயமற்ற சூழல் மாற்றமாகும். அவற்றின் தாக்கங்கள் பெண்களின் கருக்கோளகத்தில் கணத்திற்கு கணம் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. யுத்தம் எனும் அசாதாரண சூழல் கருக்கோளகத்தில் ஏற்படுத்திய நீண்ட நாள் வடுக்களை நாம் தற்போது அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவற்றை நாம் சிறப்பான முறையில் எதிர்கொள்ள வேண்டும்.



பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சிறப்பாக சிகிச்சை அளிக்க வேண்டும். குறிப்பாக தற்போது 50 வயதிற்கு மேற்பட்டவர்களில் இத்தாக்கத்தின் தன்மைகளை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. தாய்மை அடையாமை முதல் அசாதாரண குருதிப்பெருக்கம் வரை இதன் அறிகுறிகள் உள்ளன. பெண்களின் பெண் நோயில் தன்மைகளை உற்றுநோக்குமிடத்து அவர்களில் கடந்த 30 வருட காலத்தில் ஏற்பட்ட சமூகச்சூழல் பொருளியல் மாற்றங்களின் தாக்கங்கள் பாதித்துள்ளதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக போசாக்கு இன்மை, இரும்புச்சத்து குறைபாடு, கருத்தடை மருந்துகளின் பாவனை, வலிநீக்கி மருந்துகளின் கட்டுப்பாடற்ற பாவனை **(NSAID)** அவர்களின் பொதுவான ஆரோக்கியத்துடன் கருக்கோளகத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. உடலில் கானில் சுரப்புகளின் அளவும் மாதவிடாய்ச்சக்கர மாற்றங்களும் யுத்த நெருக்கீடுகளால் அசாதாரண நிலைக்கு மாற்றப்பட்ட தன்மை உள்ளது. இவை கருக்கோளக வடுக்களாக தற்போது அமைந்து உள்ளன.

கருக்கோளகத்தின் அசாதாரண தன்மைகளை மீஒலி காண்பிகளால் **(Ultrasound scanning)** கண்டறிந்து சிகிச்சை செய்யக்கூடிய வசதிகள் தற்போது உள்ளது. கருக்கோளகத் தசைகளில் கானில் சுரப்புகளின் அசாதாரண தூண்டல்களால் பல தசைக்கட்டிகள் உருவாகும் சந்தர்ப்பம் உள்ளது. இவை சாதாரண தசைக்கட்டிகளாகவோ புற்றுநோய்க் கட்டிகளாகவோ அமையலாம். அடுத்து கருக்கோளாக அகவணியிலும் அசாதாரண இளைய வளர்ச்சிகள் உருவாகக்கூடிய சூழல் உள்ளது. இவை சாதாரண சூழலில் வாழ்ந்த பெண்களைவிட சற்று வேறுபட்டுக் காணப்படும். இவை தொடர்பாக பெண்நோயியல் மருத்துவ ஆராய்ச்சி மிகவும் முக்கியமானது. கருக்கோளக புற்றுநோய்களின் ஏதுநிலைக்கும் காரணமாக அமைந்தும் இருக்கலாம்.

பெண்களில் ஏற்படும் நோய் நிலையான தீட்டுப் போதல் குருதிப் பெருக்குகளுக்கு சிகிச்சை அளிக்கும் போது உடனடி அவலத்தை மட்டும் நிவர்த்தி செய்யாது அது தொடர்பான முற்காப்பு நடவடிக்கைகளிலும் நாம் முன் முயற்சி செய்தல் வேண்டும்.

நவீன மருத்துவ வசதிகள் குறிப்பாக காந்தப்பரிவதிர்வு காண்பிகள் **(MRI),** கருக்கோளக அகக் காண்பிகள் **(Endoscopy)** என்பன பெண் நோயியல் நோய் நிலைகளைக் கண்டறிய உதவும். கருக்கோளத்தில் அபரிமித குருதிப்பெருக்கு நிகழும்போது குருதிக் குழாய்களில் குருதியை நேரடியாக உறைய வைப்பதன் மூலம் கட்டுப்படுத்தல் என்பனவற்றை மேற்கொள்ளலாம். இவ்வாறு நவீன மருத்துவ வசதிகள் உடைய பெண் நோயியல் மருத்துவ விடுதி அமைத்தல் எம்மன்னையர்களுக்கு நாம் வழங்கும் சுகநலன்களை வலுவூட்டும். காரணம் அறியாது காரிருளிலேயே காவு கொள்ளப்படும் காரிகைகள் வாழ்வு தவிர்க்கப்பட, நுண்மாண்புல அணுகுமுறை போர்வடுமிக்க சமூகத்தில் பெண்நோயியலில் தேவை ஆகும்.

மருத்துவர்.
சி.யமுனாநந்தா

# விபத்துக்குள்ளான விமானத்தில் 30 மில்லியன் ரூபா பணம் மீட்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் விமானம் விபத்துக்குள்ளான பகுதியில் இருந்து 30 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள பணம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி பாகிஸ்தானின் லாகூரில் இருந்து சென்ற விமானம் கராச்சியில் தரையிறங்குவதற்கு முன்பு குடியிருப்பு பகுதியில் விபத்துக்குள்ளானது.

இதில் குழந்தைகள் உட்பட 97 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில், 2 பேர் மட்டும் உயிர் தப்பினர்.

விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்து உடைமைகளை எடுத்து உரியவர்களிடம் ஒப்படைக்கும் பணி நடந்து வரும் நிலையில், 2 பைகளில் இந்திய மதிப்பில் 30 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள பல்வேறு நாடுகளின் நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பணம் யாருடையது? விமான நிலையத்தின் பரிசோதனைகளை மீறி இவ்வளவு பெரிய தொகை எப்படி விமானத்தில் எடுத்து வரப்பட்டது? என்பது பற்றிய விசாரணை நடந்து வருவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (2-5)

# உலகை உலுக்கும் கொரோனா 6 மில்லியனைக் கடந்தது பலி!



(ஜெனிவா)

மனித அழிவுகளை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 மில்லியனை கடந்துள்ளது.

இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்கு 60 இலட்சத்து 31 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றால் 3 இலட்சத்து 66 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர, 26 இலட்சத்து 59 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றால் மிகப்பெரிய அழிவினை சந்தித்த நாடாக அமெரிக்கா விளங்குகின்றது. அமெரிக்காவில் இதுவரை 17 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவிற்கு அடுத்தப்படியாக அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளாக பிரேஸில், ரஷ்யா, ஸ்பெயின் மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இந்தியாவை புரட்டிப்போடும் கொரோனா 1 இலட்சத்து 73 ஆயிரத்து 763 பேர் பாதிப்பு

(டில்லி)



இந்தியாவில் கொரோனா வைரஸால் ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 763 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 971 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா அறிகுறி உள்ளவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகளும் தீவிரமாக நடைபெறுகின்றன.

எனினும் நாடு முழுவதும் பரிசோதனைகளை அதிகரிக்க, அதிகரிக்க, தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்கிறது. அதே சமயம் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருவது ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

இந்நிலையில் நேற்றுக் காலை மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் மொத்தம் ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 763 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மட்டும் 7ஆயிரத்து 964 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 265 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆயிரத்து 971 ஆக உயர்ந்துள்ளது. (ஜ-4)

# சுயாதீன ஆணைக்குழு தேவையா? இல்லையா? என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும்

## மனித உரிமை ஆணைக்குழுத்தலைவர்



(கொழும்பு)

நாட்டிற்கு சுயாதீன ஆணைக் குழுக்கள்தேவையா? இல்லையா? என்பதை பொதுமக்கள் தீர்மானிப்பதற்கு இடமளிக்க வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தீபிகா உடகம வலியுறுத்தியுள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் சுயாதீன ஆணைக்குழுக்கள் நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டன.

சுயாதீன ஆணைக்குழுக்களைப் பொறுத்தவரையில் ஜனநாயகத்தின் இலட்சணங்களை வெளிப்படுத்துபவையாகவும்பொது மக்களின் அடிப்படை உரிமைகளின் குரல்களாகவும் இருந்து வருகின்றன.

இவ்வாறான நிலையில் 19 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான வெவ்வேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் இந்தச் சட்டத்திருத்தத்தால் வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் காரணமாக வினைத்திறனான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது.

எனவே 19 ஆவது திருத்தச் சட்டத்தினை நீக்க வேண்டும் என்ற மனநிலையிலும் உள்ளனர்.

இந்த மனநிலைக்கு வலுச்சேர்க்கும் முகமாக மூன்றிலிரண்டு பெரும்பான்மையை அடுத்த பொதுத்தேர்தலில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அபிப்பிராயத்தினைக் கொண்டவர்களும் உள்ளனர்.

என்னைப் பொறுத்தவரையில் சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளாக அவை இருப்பதனால் இருக்கும் பலாபலன்கள் உள்ளிட்டவை தொடர்பில் பொதுமக்கள் புரிதலைக் கொண்டிருப்பார்கள்.

ஆகவே அவர்கள் சுயமாக தீர்மானித்து முடிவெடுப்பதற்கு இடமளிக்க வேண்டும். பொது மக்களின் சிந்தனை வலிந்து திணிப்புக்கள் மூலம் திசை மாற்றக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# 304 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

நாட்டிற்கு வருகைதர முடியாமல் அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் தங்கியிருந்த 304 பேர், நேற்று அதிகாலை, கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இலங்கை விமான சேவைக்குரிய விசேட விமானங்கள் மூலம் இவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இந்தியாவின் மும்பை நகரிலிருந்து வருகைதந்த விமானத்தில் 18 பேரும், அவுஸ்திரேலியா- மெல்போர்ன் நகரிலிருந்து வருகை தந்த விமானத்தில் 286 பேரும் இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (ஜ-4-8)

# ஜூன் மாதம் தொடக்கம் 33 ரயில்கள் சேவையில்



(கொழும்பு)

ஜூன் முதலாம் திகதி முதல் 33 ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

19 ஆயிரத்து 593 பேர் வேலைக்காக பயணிக்க ரயில்வே திணைக்களத்தில் பதிவு செய்துள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் டிலந்த பெர்ணாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த வாரம் முதல் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

ஏற்கனவே 4 ஆயிரத்து 800 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் தெரிவித்தார். (ஜ-4-8)


கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு
மணமகள் தேவை

பிறப்பு: 1985 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: சூரி, செவ் 6 இல்
உயரம்: 5’4”
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. விற்பனைப் பிரதிநிதி
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/7019

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 19 ½ செவ் 1 இல்
உயரம்:5’7”
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. லண்டன் PR
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/7025

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி.பா: செவ் 12 இல்
தகைமை/தொழில்:க.பொ.த.உ.த. மெக்கானிக்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/7027

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: செவ் 7 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி. லண்டன்
எதிர்பார்ப்பு: உள்நாடு எனின் அரச தொழில். வெளிநாடு எனில் PR உள்ள பெண்
தொ.இ: B/7036

இவர்களுக்கு
மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5’6”
தகைமை/தொழில்: B.A.
எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்.
தொ.இ: G/7700

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3
கி.பா: 40 ¼ சூரி செவ் 4 இல்
உயரம்: 5’2”
தகைமை/தொழில்: பட்டதாரி. அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம்
தொ.இ: G/7705

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 63 செவ் 11 இல்
உயரம்: 5’5”
தகைமை/தொழில்: பட்டதாரி
எதிர்பார்ப்பு: உள்நாட்டில் அரச உத்தியோகம் பார்க்கும் வரன்
தொ.இ: G/7709

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: 18 3/4 செவ் 4 இல்
உயரம்: 5’3”
தகைமை/தொழில்:க.பொ.த.உ.த.
எதிர்பார்ப்பு:.வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7710

கல்யாணமாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்: - காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை
விடுமுறை தினம்:-ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்


# பலத்த காற்றுடன் மழை மின்சாரம் துண்டிப்பு



(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில், திடீரென வீசிய பலத்த காற்று மற்றும் மழையினால் பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாகினர்.

அம்பாறை நகரப்பகுதி, காரைதீவு, கல்முனை, மருதமுனை, பெரியநீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு, மணல்சேனை மற்றும் சம்மாந்துறை, சவளைக்கடை , மத்திய முகாம் போன்ற பகுதிகளில் வீசிய சுழல் காற்றுக் காரணமாக வீதிகளில் அதிகளவிலான தூசு மண் வீசப்பட்டன.

சில பகுதிகளில் பாரிய மரங்கள் முறிந்து விழுந்துள்ளதால், வீதிப் போக்குவரத்துக்கும் தடைகள் ஏற்பட்டன. மேலும் சில பகுதிகளில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. (ஜ-5)

# தனிமைப்படுத்தலை மீறிய 132 பேர் கைதாகினர்

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் 132 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 912 பேர் கைது செய்யப்பட்டனர்.

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியை பின்பற்றாமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே குறித்த கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. (ஜ-8)

# தெருக்களில் நிலைகுலைந்து கிடக்கும் மக்கள் உண்மையை மறைக்கிறதா ஈரான்?

## வெளிவந்த புகைப்படங்களால் சந்தேகம்

(டெஹ்ரான்)

**ஈரானில் கொரோனா வைரஸ் முதல் நோயாளி குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாவதற்கு முன்பே அங்கு கொரோனா பாதிப்பு ஆரம்பித்து விட்டதாகக் கூறி, தெருக்களில் நிலைகுலைந்து கிடக்கும் மக்களின் புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.**



கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஈரானில், 146,668 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 7,677 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆனால் ஈரான் உண்மையான இறப்பு எண்ணிக்கையை மூடி மறைப்பதாகவும் அது இதை விட ஐந்து மடங்கு அதிகம் இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஏனெனில், அமெரிக்க பொருளாதாரத் தடைகள் ஈரான் மீது தொடர்வதால், சீனாவின் ஆதரவை ஈரான் பெரிதும் நம்பியுள்ளது. இதனால் அந்நாட்டிற்கு சங்கடத்தை ஏற்படுத்தாமல் இருக்கும் ஈரான் இந்த விடயத்தை மூடி மறைப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஈரான் முதல் கொரோனா வைரஸ் நோயாளியை, பெப்ரவரி 19 ஆம் திகதி அன்று பதிவு செய்தது. தற்போது வரை நாட்டில் 7,417 பேர் மட்டுமே வைரஸால் இறந்துவிட்டதாக அந்நாட்டு அரசாங்கம் கூறுகிறது.

தெருக்களிலும் கடைகளிலும் ஆங்காங்கே சிலர் விழுந்து கிடப்பதால், ஈரான் கொரோனா விடயத்தில் உண்மையை மறைக்கிறதோ என்ற சந்தேகம் மேலும் வலுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(2-5)

# ஜி-7 உச்சி மாநாடு ட்ரம்ப் அழைப்பை நிராகரித்த மெர்க்கல்

(வோஷிங்டன்)

வோஷிங்டனில் நடைபெறவுள்ள ஜி-7 உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விடுத்த அழைப்பை ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலோ மெர்க்கல் நிராகரித்துள்ளார்.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஏழு நாடுகளின் ஜி-7 உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அழைப்பை ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலோ மெர்க்கல் நிராகரித்ததாக **Politico** ஊடக நிறுவனம் தெரிவித்துள்ளது.

வோஷிங்டனில் ஜூன் மாத இறுதியில் ஜி-7 உச்சிமாநாட்டிற்கு ஜனாதிபதி ட்ரம்ப் அழைப்பு விடுத்ததற்கு மெர்க்கல் நன்றி தெரிவித்தார்.



ஒட்டுமொத்த தொற்றுநோயைக் கருத்தில் கொண்டு, வோஷிங்டனுக்கான பயணத்திற்கு அவர் தனிப்பட்ட பங்களிப்பை ஒப்புக்கொள்ள முடியாது என்று ஜேர்மன் அரசாங்க செய்தித் தொடர்பாளர் ஸ்டெஃபென் சீபர்ட் கூறியதாக **Politico** அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (2-5)

# உலக சுகாதார நிறுவனத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்படும் - அமெரிக்க ஜனாதிபதி

(வோஷிங்டன்)

உலக சுகாதார ஸ்தாபனத்துடன் முன்னெடுக்கப்பட்ட அனைத்து தொடர்புகளையும் இரத்துச் செய்யவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு சீனாவே காரணம் என அமெரிக்கா குற்றம் சுமத்தி வருகிறது.



சீனா இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென உலக சுகாதார நிறுவனம் அழுத்தம் கொடுக்கத் தவறியுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை உலக சுகாதார நிறுவனத்திற்கு நிதி வழங்கும் நாடுகளின் வரிசையில் அமெரிக்கா முன்னிலை வகிக்கின்றது.

வருடாந்தம் சுமார் 400 மில்லியன் டொலர்களுக்கும் கூடுதலான நிதியை அமெரிக்கா உலக சுகாதார நிறுவனத்திற்கு இதுவரை காலமும் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (2-5-8)

# கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது கொரோனாவை அதிகரிக்கச் செய்யும்

## உலக சுகாதார ஸ்தாபனம்

(ஜெனிவா)

கொவிட்-19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த உலக நாடுகளால் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகளைத் தளர்த்துவதன் மூலம் வைரஸ் தாக்கம் குறைவடையாது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிறப்புப் பிரதிநிதி டேவிட் நபரோ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனி ஒருவர் சமூகத்தில் நடமாடுவது அதிகரிப்பதால் வைரஸ் விரைவில் அதிகரிக்கக் கூடும். எனவே பயணக் கட்டுப்பாடுகளைக் குறைத்திருந்தாலும் முடிந்தளவு சமூக இடைவெளியை பேணுவது அத்தியாவசியம்.

ஒருவருக்கு நோய் அறிகுறிகள் காணப்படின் அவர் உடனடியாக தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். கொவிட்-19 தொற்று நோயின் வீரியம் குறைவடைந்து வருவதைக் கருத்தில் கொண்டு சில நாடுகள் வெளிநாட்டு பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளன.

ஆனால் அந்த நாடுகளிலிருந்து புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனால் கொரோனாத் தொற்று மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(2-5-8)

# பாகிஸ்தானில் 900 சிறுவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கொரோனா தொற்றுக்குள்ளான சிறுவர்களின் எண்ணிக்கை 900 ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்தன.

பெரும்பான்மையான சிறுவர்கள் 10 வயதிற்கும் குறைந்தவர்கள் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

பாகிஸ்தானின் தென்பகுதி மாநிலத்தில் கொரோனா வைரஸ் பரிசோதனை நடத்தப்பட்டது.

இதன்போது அதிகளவான சிறுவர்கள் நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள்பலரிடம் நோய்த் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படவில்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை பாகிஸ்தானில் ஊரடங்குச் சட்டம் அண்மையில் தளர்ப்பட்டது.

எனினும் கொவிட்-19 தொற்று அதிகரித்த காரணத்தினால் மீண்டும் ஊரடங்கை அமுல்படுத்துவது குறித்து ஆலோசித்து வருவதாக பாகிஸ்தான் அரசாங்கம் தெரிவித்தது. (2-8)

# பிரேஸிலின் குரல் வளையை நசுக்கும் கொரோனா ஒரேநாளில் முப்பதாயிரம் பேர் பாதிப்பு

(ரியோ டி ஜெனிரோ)

கொரோனா வைரஸின் தாக்கம் பிரேஸில் நாட்டில் தீவிரமடைந்துள்ளது. அங்கு ஒரேநாளில் 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிப்படைந்துள்ளனர்.

கொரோனா வைரஸின் தாக்கம் உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாத் தொற்றால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து, பிரேசில் இரண்டாம் இடத்தில் உள்ளது.

இந்நிலையில், கொரோனா வைரஸின் தாக்கம் பிரேஸில் நாட்டில் தீவிரமடைந்துள்ளது. அங்கு ஒரேநாளில் 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிப்பு அடைந்துள்ளனர். மேலும் ஒரே நாளில் கொரோனாவுக்கு பலியானோர் எண்ணிக்கை ஆயிரத்து 200 ஐ நெருங்கியுள்ளது.

பிரேஸில் நாட்டில் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை ஒரேநாளில் 30 ஆயிரத்தை நெருங்கியது. அங்கு கொரோனாத் தொற்று பாதிப்பு எண்ணிக்கை 4 இலட்சத்து 68 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

மேலும், அங்கு கொரோனா வைரஸிற்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 28 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 93 ஆயிரத்தைத் தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# ஐக்கிய தேசியக் கட்சியை அசைக்க முடியாது
# அது முன்னோக்கிச் செல்வதை தடுக்கவும் முடியாது

## ருவான் விஜேவர்த்தன இறுமாப்பு

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சி என்பது ரணிலோ சஜித்தோ அல்லது கபீர் ஹாசிமோ அல்ல. இது கிராமப் புறங்களைச் சேர்ந்த ஆதரவாளர்களால் பாதுகாக்கப்பட்டு வரும் கட்சியாகும்.

எனவே தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமைத்துவத்திலிருந்து விலகிச் சென்றாலும் ஐ.தே.க.முன்னோக்கிச் செல்வதை யாராலும் தடுக்க முடியாது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

எமது கட்சியிலிருந்து விலகிச் சென்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களை எமது கட்சியிலிருந்து நீக்கியுள்ளதாக அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதேபோன்று சுயாதீனமாகவும்வேறு கட்சிகளுடனும் இணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிட தீர்மானம் எடுத்துள்ள எமது கட்சியில் உறுப்புரிமை பெற்றிருந்தவர்களின் உறுப்புரிமையை நீக்குவதற்காக செயற்குழு தீர்மானம் எடுத்துள்ளதுடன், அதற்கு நாங்கள் இணக்கம் தெரிவித்ததை அடுத்து அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 99 பேர் இவ்வாறு நீக்கப்பட்டுள்ளனர்.

இதனால் கட்சியில் காணப்பட்ட இடைவெளியை நிரப்புவதற்காக செயற்குழு புதிய நியமனங்களையும் வழங்கியுள்ளது.

அதற்கமைய கட்சியின் பொதுச் செயலாளராக தொடர்ந்தும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் நியமிக்கப்பட்டதுடன், உப தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க



வும் தேசிய அமைப்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்கவும் நியமிக்கப்பட்டனர். தற்போது எமது கட்சியின் தலைவர் மற்றும் பிரதித் தலைவருக்கிடையில் இடைவெளி இருக்கின்றது.

அது தொடர்பில் எதிர்வரும் தினங்களில் தீர்மானம் எடுப்போம். இதேவேளை கட்சியின் பொருளாளராக சட்டத்தரணி பிஸ்மா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதன்போது கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க எமக்கு எப்போதுமே தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான எண்ணம் இல்லை. தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையில் மக்களின் நலனைப் பாதுகாப்பதே எமக்கு அவசியமாகும்.

அதனால் மக்களின் பொருளாதார மற்றும் வாழ்வாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுவதுடன் மக்களின் உரிமைகளை மீறும் வகையிலும் அவர்களை பாதிக்கும் வகையிலும் அரசாங்கம் தீர்மானங்கள் எடுத்தால் அதனை எதிர்த்து குரல் எழுப்பவும் பின்வாங்க மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# விவசாய நவீனமயமாக்கல் திட்ட விண்ணப்ப கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)
விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் தொடர்பில் அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்காக விண்ணப்பிக்கும் கால எல்லை ஜூலை 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனாத் தொற்றினால் சீரற்ற சமூக நிலையில்



அங்கஜன் தெரிவிப்பு

நவீனமயமாக்கல் திட்டத்திற்கான விண்ணப்பங்களை உரிய திகதியில் அனுப்ப முடியாதிருந்தமையால் அதன் காலத்தை நீடிக்குமாறு பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி, கமத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரனவிடம் முன்னாள் கமத்தொழில் பிரதியமைச்சரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் விடுத்த கோரிக்கையையடுத்து இந்தக் காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஜ-2-5-8)

# பொசன் நிகழ்வை முன்னிட்டு மதுபான நிலையங்கள் மூடல்

(கொழும்பு)
அரச பொசன் நிகழ்வை முன்னிட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை மற்றும்சனிக்கிழமை நாட்டிலுள்ள அனைத்து மதுபான நிலையங்களையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு அவர் தெரிவிக்கையில்,

வர்த்தகத் தொகுதியிலுள்ள மதுபான நிலையங்களின் விற்பனை நடவடிக்கைகளை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொசன் தினங்களில் மிருக பலிகொடுக்கும்இடங்கள், சூதாட்ட நிலையங்கள், கசினோ மற்றும் இறைச்சி விற்பனை நிலையங்களையும் மூடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த தீர்மானத்தை மீறும் வகையில் செயற்படும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கலால் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார். (ஜ-8)

## குணமடைந்தோர் 781

(கொழும்பு)
நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 27 பேர் நேற்றுக் குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன் மூலம் நாட்டில் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 781 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை ஆயிரத்து 558 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 10 மரணங்களும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# சீஷெல்ஸில் உள்ள இலங்கையர்கள் நாடு திரும்ப அரசு நடவடிக்கை

(சீஷெல்ஸ்)
சீஷெல்ஸில் வசிக்கும் மற்றும் பணியாற்றும் பல இலங்கையர்களைக் கருத்தில் கொண்டு, நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள விதிமுறைகள் மற்றும் தனிமைப்படுத்தல் வசதிகளுக்கு அமைவாக அவர்கள் இலங்கைக்கு மீளத் திரும்புவதற்கான வசதிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைச் சமூக உறுப்பினர்களுடன் சீஷெல்ஸிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் தொடர்ச்சியாக தொடர்புகளைப் பேணி வருவதுடன் உதவிகள் தேவைப்படும் இலங்கையர்களுக்கு ஆதரவுகளை வழங்குவதற்காக இலங்கையின் சங்கம், சீஷெல்ஸ் பௌத்த சங்கம் மற்றும் லக்ஸ்டார் கிரிக்கெட் கிளப் ஆகியவற்றை உள்ளடக்கிய உயர் ஸ்தானிகராலயத்தின் தலைமையிலான இணைந்த குழுவை நியமிப்பதற்கான முன்முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

இலங்கைச் சமூகத்தினரின் வேண்டுகோளின் பேரில், அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை விநியோகித்துள்ள உயர் ஸ்தானிகராலயம் இலங்கையர்கள் தொடர்ச்சியாக உயர் ஸ்தானிகராலயத்தைத் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் 24 மணிநேர தொலைபேசி அழைப்புச் சேவையையும் நிறுவியுள்ளது.

தொழில் வாய்ப்புக்களை இழத்தல், தொழில் வாய்ப்பு ஒப்பந்தங்கள் நிறுத்தப்படுதல் மற்றும் அவசர மருத்துவ சிகிச்சைக்கான தேவை ஆகியவற்றின் காரணமாக ஏற்கனவே விமான டிக்கெட்டுக்களை கொள்வனவு செய்துள்ள இலங்கைக்கு நாடு திரும்புவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தும் வகையில் உயர் ஸ்தானிகராலயத்தில் தம்மைப் பதிவுசெய்த பல இலங்கையர்களுடன் இந்த உயர் ஸ்தானிகராலயம் தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணி வருகின்றது. தற்போது பலர் சீஷெல்ஸிலுள்ள ஐந்து தீவுகளில் பரவிக் காணப்படுகின்றனர்.

சீஷெல்ஸில் இம்மாதம் 11 ஆம் திகதி வரை கொவிட்-19 தொற்றுக்குள்ளான ஒரேயொரு நோயாளர் மட்டுமே இனங்காணப்பட்டுள்ளதுடன் ஏப்ரல் 6 ஆம் திகதி இனங்காணப்பட்ட கொவிட்-19 தொற்றுக்குள்ளான 11 நபர்களுக்குப் பின்னர் எந்தவொரு தொற்றுக்குள்ளான நபரும் பதிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பொய்மை விடுத்து உண்மை பேசுங்கள் இதுவே நாட்டின் நல்ல அரசின் கடமை

## சஜித் சாடல்

(கொழும்பு)
நாடாளுமன்றை மீளக்கூட்டி, நாட்டை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும் என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த அவர், மக்களை திசைதிருப்பும் கருத்துக்களைத் தான் அரசாங்கம் தற்போது முன்வைத்து வருகிறது என குற்றம் சாட்டினார்.

உண்மையில் அரசாங்கம் இவ்வேளையில் ஸ்திரமான கொள்கையொன்றுடன் பயணிக்க வேண்டும் என்றும் அப்போது மட்டும்தான் இந்தச் சவாலை வெற்றிகரமாக முகம்கொடுக்க முடியும் என்று குறிப்பிட்ட அவர்,

இவ்வாறானதொரு காலத்தில் அவர் மக்களுக்கு பொய்யான தகவல்களை வெளியிடாமல், உண்மைத் தன்மையை வெளிப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்வதாகவும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மக்களுக்கு நிவாரணமளிக்கும் வகை



யில் அமைந்திருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சுதந்திரத்திற்குப் பின் இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

06

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




| பாராளுமன்றத் தேர்தல் 1956 | | | | |
|---|---|---|---|---|
| | வேட்பாளர்கள் | | | |
| A-போட்டியிட்டோர்<br>B- தெரிவு செய்யப்பட்டோர்<br>C- போடப்பட்டமொத்த வாக்குகள் | A | B | C | % |
| ஐக்கிய தேசிய கட்சி | 76 | 8 | 738,810 | 27.91% |
| ஒருங்கிணைந்த மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | 60 | 51 | 1,046,277 | 39.52% |
| லங்கா சமசமாஜகட்சி | 21 | 14 | 274,204 | 10.36% |
| கம்யூனிஸ்ட் கட்சி | 09 | 3 | 119,715 | 4.52% |
| அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | 01 | 1 | 8,914 | 0.34% |
| இலங்கைத் தமிழரசுக்கட்சி | 14 | 10 | 142,758 | 5.39% |
| தமிழ் பாதுகாப்பு இயக்கம்(Tamil Resistance Front) | 02 | 1 | 7,931 | 0.3% |
| சுயேட்சை | 66 | 7 | 308,638 | 11,66% |
| மொத்தம் | 249 | 95 | 2,647,247 | |

ஜூலை 1960 இல் மறு தேர்தல் இடம்பெற்றது. சபாநாயகர் தேர்தலில் சுபசிங்க முதியான்செலாகே டிக்கிரி பண்டா எதிர்க்கட்சியின் பெரும்பான்மை வாக்குகளினால் சிறுபான்மை அரசாங்கத்தின் வேட்பாளரான சேர் அல்பேட் எஃப் பீரிஸை தோற்கடித்து சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## நான்காவது பாராளுமன்றம் (பிரதிநிதிகள் சபை)
## 30 மார்ச் 1960- ஏப்ரல் 1960

| பிரதமர் | எதிர்க்கட்சித் தலைவர் | சபாநாயகர் |
|---|---|---|
| டட்லி சேனநாயக்க | சீ.பி.டி. சில்வா | எஸ்.எம். டிக்கிரி பண்டா |





### இலங்கை பாராளுமன்றத் தேர்தல், ஜூலை 1960

இலங்கையின் 5ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1960 ஜூலை 20 இல் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு 151 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது.

மார்ச் 1960 தேர்தலில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெறாமையால் அதே ஆண்டில் இரண்டாம் தடவையாகத் தேர்தல் நடத்தப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்ட பின்னர் அக்கட்சி பிளவடைந்திருந்தது. ஆனாலும் அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க கட்சித் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஓரளவிற்குத் தனது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொண்டது. தனது கணவரின் கொள்கைகளை, குறிப்பாக சிங்களம் மட்டும் சட்டம், இலங்கையின் இந்தியத் தமிழர்களை இந்தியாவுக்கு நாடுகடத்தல் போன்றவற்றை முன்னெடுக்கப் போவதாகத் தேர்தல் பரப்புரைகளில் கூறிவந்தார்.

டட்லி சேனநாயக்கவின் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரை சுதந்திரக் கட்சியின் கொள்கைகளையே கொண்டிருந்தது. அதே வேளையில், சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறாக இடதுசாரிப் போக்கைத் தமது பொருளாதாரக் கொள்கைகளில் கொண்டிருந்தது. தனியார்துறை மற்றும் சமயப் பாடசாலைகளை அரசுடைமையாக்கல் இக்கட்சியின் முக்கிய கொள்கையாக இருந்தது. சுதந்திரக் கட்சி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று ஆட்சியைப் பிடித்தது. திருமதி பண்டாரநாயக்க இலங்கைப் பிரதமரானார். இத் தேர்தல் இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்திலுமே முக்கியத்துவம் பெற்றது. இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்திலுமே முதலாவது பெண் பிரதமராக திருமதி பண்டாரநாயக்க தேர்ந்தெடுக்கப்பட்டமையே சர்வதேச அரங்கில் முக்கியத்துவத்தைப் பெறக் காரணமாயிற்று.

திருமதி பண்டாரநாயக்க கட்சித் தலைவர் (SLFP) என்ற ரீதியில், 1960 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி பிரதமராக நியமிக்கப்பட்டார். ஆனால், இவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இல்லாத காரணத்தினால், பிரதமராகத் தொடர்ந்திருப்பதை இயலுமாக்குவதற்காக 1960 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 02 ஆம் திகதி செனற்றிற்கு இவர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். சபாநாயகர் பெல்பொலவின் இராஜினாமாவையடுத்து 1964 ஆம் ஆண்டு ஜனவரி 24இல் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பர்னாந்து சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1965

இலங்கையின் 6ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1965 மார்ச் 22 இல் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு 151 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது. 1964 ஆம் ஆண்டு டிசெம்பரில் லேக்ஹவுஸ் பத்திரிகைகள் தேசியமயமாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து சில உறுப்பினர்கள் வெளியேறியதை அடுத்து சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசு பாராளுமன்றத்தில் பலம் இழந்தது. பண்டாரநாயக்கவின் தாராள தேசியமயமாக்கல் கொள்கை காரணமாக இலங்கைத் தீவின் வணிக சமூகத்தினரின் அதிருப்திக்கு அவர்கள் ஆளாக வேண்டி வந்தது. இதனால் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது. நாட்டின் பொருளாதாரம் நலிவடைந்தது. தீவிர உணவுப் பற்றாக்குறையால் உணவுப் பங்கீட்டு முறை நாட்டில் அமுல்படுத்தப்பட்டது.

சுதந்திரக் கட்சிக்கும் அவர்களின் மார்க்சியக் கூட்டணிக்கும் எதிராக தேசிய முன்னணி ஒன்றை அமைக்கவிருப்பதாக ஐ.தே.க.வாக்குறுதி அளித்தது. சிங்களத் தேசியவாதிகளுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என ஐ.தே.க. தலைவர் டட்லி சேனநாயக்க வாக்குறுதி அளித்தார். ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. ஆனாலும், ஐ.தே..க தலைவர் டட்லி சேனநாயக்க இலங்கைத் தமிழரசுக் கட்சியினரின் ஆதரவுடன் ஆட்சியை அமைத்தார். கொழும்பு தெற்கு தொகுதியில் ஜே.ஆர் ஜெயவர்த்தன (ஐ.தே.க), பெர்னார்ட் சொய்சா (லசசக) ஆகியோர் போட்டியின்றித் தெரிவாகினர். சேர் அல்பேட் பீரிஸின் இறப்பையடுத்து 1967 ஆம் ஆண்டு செப்டெம்பர் 27 இல் கொரயா சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1970

இலங்கையின் 7ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1970 ஆம் ஆண்டு மே 27 இல் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு 151 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது. முக்கிய எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மார்க்சிய இடதுசாரிகளுடன் நீண்ட கால கூட்டணியை ஏற்படுத்துவதே சரியானதாகும் எனத் தீர்மானித்தார். இதற்கமைய அவர் திரொக்சியவாதிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து ஐக்கிய முன்னணி என்ற கூட்டணியை உருவாக்கினார்.

பொதுத் திட்டம் என அழைக்கப்பட்ட இவர்களின் கூட்டுத் திட்டத்தில், பரவலான தேசியமயமாக்கல், சோவியத் சார்பு வெளியுறவுக் கொள்கை, சோல்பரி அரசியலமைப்பை ஒழித்தல் போன்றவை முக்கிய அம்சங்களாக இருந்தன. மாறாக ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி யின் அரசு முதலாளித்துவப் போக்கைக் கடைப்பிடித்து வந்தது. அது பணக்காரர்களின் கட்சி என்ற பெயரைப் பெற்றது. இதனால் சாதாரண மக்களிடையே ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரங்கள் எளிதில் செல்வாக்கைப் பெற்றது. ஐக்கிய முன்னணி பெரும் வெற்றியைப் பெற்றது.

மொத்தம் 151 இடங்களில் ஐக்கிய முன்னணி 116 இடங்களைக் கைப்பற்றியது. இத்தேர்தலில் வெலிமடைத் தேர்தல் தொகுதியில் ஆர்.எம்.பண்டார (ஐக்கிய முன்னணி) போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். திருமதி பண்டாரநாயக்க இலங்கைப் பிரதமரானார்.

தமிழ் பேசும் பகுதிகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் வெற்றி பெற்றன. தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் மூன்று உறுப்பினர்களும் பின்னர் ஐக்கிய முன்னணியில் இணைந்தனர்.

(தொடரும்)

## தேர்தலை நிச்சயமாக நடத்த வேண்டும்

### பிரதமர் மகிந்த உறுதி



(கொழும்பு)

தேர்தலை நிச்சயமாக நடத்த வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையில் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடு பட்டதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குத்தான் தேர்தல் ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது.

தேர்தலை நடத்துவதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் கடப்பாடும் பொறுப்புமாகும்.

நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் தேர்தலை நடத்துமாறு கோரிய போதிலும் தற்பொழுது எதிர்க்கட்சிகளே தேர்தல் வேண்டாம் எனக் கூறுகின்றன.

உண்மையில் இந்தக் கோரிக்கையின் உள் நோக்கத்தை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

ஏன் எதிர்க்கட்சிகள் தேர்தலைக் கண்டு அஞ்சுகின்றன என்பது மக்களுக்குத் தெரியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## துப்பாக்கிச்சூடு ஒருவர் படுகாயம்



(வெலிகம)

வெலிகம பகுதியில் துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை, வெலிகம - மிரிஸ்ஸவிலுள்ள மீன்பிடி துறைமுகமொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த நபர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர். (ஜ-8)

## பருவகால மழை ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழை நிலைமை படிப்படியாக உருவாகி வருகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி மேல், சப் ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது

களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் சில இடங்களில் 50 மி.மீக்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. (ஜ-4-8)



## ஜேர்மனியில் மேலும் 567 பேருக்கு தொற்று

(பேர்லின்)

ஜேர்மனியில் 567 பேருக்கு புதிதாக கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து ஜேர்மனியில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 83 ஆயிரத்து 19 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் மேலும் 24 உயிரிழப்புக்கள் பதிவாகியதையடுத்து மொத்த மரணங்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 594 ஆக உயர்வடைந்துள்ளது.

எனினும் இதுவரையில் ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 100 பேர் சிகிச்சைகளின் பின்னர் குணமடைந்துள்ளமை குறிப்பிடத்க்கது. (ஜ-2-5-8)

## வானிலிருந்து மர்ம திரவம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி கொடகவெல பிரதேசத்தின் சில இடங்களில் நேற்று மஞ்சள் நிறத்திலான திரவச் சொட்டுகள் விழுந்துள்ளன.

அந்தத் திரவச் சொட்டுகள் என்ன என இதுவரையில் உறுதி செய்ய முடியாமல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஜ-4)


### பெண் உதவியாளர் தேவை

Cargills Square இல் (No:11 1st Floor, Jaffna) அமைந்துள்ள Secrets விற்பனை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

தகைமை:- A/L OR O/L ஆங்கில அறிவு, வேலை முன்னனுபவம் விரும்பத்தக்கது.

வேலை நேரம்:- 10.00 am to 7.30 pm Monday - Saturday

தொடர்புகளுக்கு:-
Priya.G
077 951 0436, 021 221 6488

(2906)



### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 04.05.2020 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்.பொன். குணரத்தினம்**

(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர்)



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 01.06.2020 திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 03.06.2020 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் சுகாதாரத்துறையினரின் அறிவுறுத்தலைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு ஆறுதல் அளித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (2812)

கோ/ கிறிஸ்தவக் கல்லூரியடி,
பருத்தித்துறைவீதி, கோப்பாய்.

குடும்பத்தினர்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


## இராசிபலன்

31.05.2020

வைகாசி 18, ஞாயிற்றுக்கிழமை
நவமி பிற்பகல் 2.52 மணிவரை
உத்தரம் பின்னிரவு 12.43 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
சந்திராஷ்டமம்- அவிட்டம், சதயம்

வளவன்



**மேஷம்**: தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து கொண்டு செயற்படுவீர்கள், உடல் நலன் சீராகும்.



**ரிஷபம்**: காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர் கள், மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள்.



**மிதுனம்**: யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, போசன சுகமுண்டு.



**கடகம்**: உடன்பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன நன்மையுண்டு.



**சிம்மம்**: புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் இல்லம் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.



**கன்னி**: ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**துலாம்**: நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள், வேலைச் சுமை கூடும் நாள், சயன சுகக் குறைவான நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.



**விருச்சிகம்**: குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், காரிய அனுகூலம் உண்டு.



**தனுசு**: குடும்ப ஒற்றுமை கூடும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள், காரிய அனு கூலமுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.



**மகரம்**: குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வழிபாட்டால் வளம் காணவேண்டிய நாள், ரோக பயமுண்டு.



**கும்பம்**: நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், விரயங்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



**மீனம்**: உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

கனவு கற்கண்டு போன்றது! அது விரைவாக கரைந்து போகும்!

# கொவிட்-19 சமூக பாதுகாப்பு நிதிய மீதி ஆயிரத்து 213 மில்லியனாக அதிகரிப்பு



(கொழும்பு)

தனிப்பட்ட நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் இடுகம கொவிட் -19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு ஆயிரத்து 213 மில்லியனாக அதிகரித்துள்ளது. வடமத்திய மாகாணத்தில் அரச சேவை ஊழியர்கள் அன்பளிப்பு செய்த 25 மில்லியன் ரூபாவை ஆளுநர் மஹீபால ஹேரத் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

கிரிபத்கொட விகாரமகாதேவி பழைய ஆசிரியர் சங்கத்தினால் ஒரு இலட்சம் ரூபாய் ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கே.பீ. எகொடவெலே விடம் கையளிக்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் (பாதுகாப்பு அமைச்சு) 2 இலட்சத்து 47 ஆயிரத்து 538 ரூபாவையும், Tharuni Merine Enterprices நிறுவனம் 5 லட்சம் ரூபாவையும், Hirushi Merine Enterprices நிறுவனம் ஒரு மில்லியன் ரூபாவையும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சங்கநாயக்க தேரர் சங்கைக்குரிய கிரிந்திவெல சோமரத்ன தேரர் 61 ஆயிரம் ரூபாவையும், தியகம தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் நோய்த்தடுப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்த இங்கிலாந்தில் இருந்து வருகை தந்த டீ.பிரியன்த சமரகோன் 25 ஆயிரம் ரூபாவையும், ராஜகிரிய ஆயுர்வேத வைத்தியசாலையில் நோய்த்தடுப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்த அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்தவர்கள் 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவையும், அமெரிக்காவில் வசிக்கும் திருமதி சுவர்ணா எஸ். சிறிவர்த்தன 10 இலட்சத்து 99 ஆயிரத்து 668 ரூபாவையும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் 5 லட்சம் ரூபாவையும், கல்வி அமைச்சின் திட்ட முகாமைத்துவ பிரிவு 10 இலட்சத்தது 13 ஆயிரத்து 174 ரூபாவையும், **Slim Phamaceuticals (pvt) ltd** நிறுவனம் ஒரு மில்லியன் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இக்கணக்கிற்கு பெரும் பங்களிப்பு செய்து வருகின்றனர். காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் **www.itukama.lk** என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது **#207#** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பங்களிப்பை செய்ய முடியும். 076 070 0700, 011 232 0880, 011 235 4340, 011 242 4012 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும். (ஐ-8)

# பிலிப்பினியர்களை அழைக்க பிலிப்பைன்ஸ் கப்பல்கள் இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

நாட்டில் தங்கியுள்ள பிலிப்பினியர்களை பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு மீள அழைத்துச் செல்ல **BRP Davao del Sur** மற்றும் BRP **Ramon Alcaraz** ஆகிய கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு நேற்று சனிக்கிழமை வருகை தந்துள்ளன.

கொரோனா வைரஸ் பரவலால் விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக சொந்த நாட்டுக்கு திரும்ப முடியாமல் நாட்டில் தங்கியுள்ள பிலிப்பைன்ஸ் சுற்றுலாப் பயணிகள் மற்றும் தொழிலாளர்கள் அனைவரும் குறித்த கப்பல்களின் ஊடாக அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

மேலும் கொழும்புத் துறைமுகத்திலிருந்து கப்பல்களுக்கான பொருட்களை அவர்கள் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆனாலும் கப்பலில் வருகை தந்தவர்களுக்கு நாட்டுக்குள் கால் பதிக்க அனுமதி வழங்கப்படவில்லை. எனவே கப்பலில் பயணிக்க தயாரான பிலிப்பினியர்கள் அனைவரும் கிருமித் தொற்று நீக்கத்திற்கு உட்படுத்தப்பட்டு குறித்த கப்பலுக்குள் அனுமதிக்கப்பட்டனர். (ஐ-4)

# ஊரடங்கை மீறிய 173 பேர் கைது

(கொழும்பு)

ஊரடங்கை மீறிய குற்றச்சாட்டின் பேரில் 173 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணி தொடக்கம் நேற்று அதிகாலை 4 மணிவரையான காலப் பகுதியிலேயே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றது.

அத்துடன் குறித்த காலப் பகுதியில் 53 வாகனங்களும் பொலிஸாரினால் கையகப்படுத்தப்பட்டன.

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஊரடங்கு உத்தரவை மீறியதான குற்றச்சாட்டில் 66 ஆயிரத்து 835 பேர் கைது செய்யப்பட்டுள்ள தோடு 18 ஆயிரத்து 831 வாக னங்களும் பொலிஸாரினால் கையகப் படுத்தப்பட்டன. (ஐ-8)

## (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2049


facebook

**நிவேதா**




1000 வெட்டுக்கிளியை பிடிச்சிட்டு வந்தா ஒரு குவாட்டர் இலவசம்னு சொல்லுங்க ஒரே நாள்ல வெட்டுக்கிளி இனமே அழிஞ்சிடும் ஐடியா இல்லாத பசங்க

**ஆரவ்**




**சுமதி**



மின்சாரமும் சரி... சம்சாரமும் சரி... விட்டிட்டுப் போகும் போதுதான் அருமை தெரியும்

**மகேஷ்**



கசப்பான வேப்பம் பூவிலிருந்து தேனீக்கள் தேனை எடுப்பதில் தவறுவதில்லை... சில கசப்பான அனுபவங்கள் நமக்கு நல்ல விடயங்களை கற்றுத்தர ஒருபோதும் தவறுவதில்லை

**கமலா**



என்னைப் பற்றி புறம் பேசுபவர்களுக்கும் என்னைத் தூற்றிப் பேசுபவர்களுக்கும் என்னைப் பிடிக்காதவர்களுக்கும் என்னைப் புரியாதவர்களுக்கும் நான் கூறும் ஒரே பதில் நல்லா இரு

**வருண்**



எதிர்பார்த்த போது கிடைக்காத எதுவும் அதற்குப் பிறகு எத்தனை முறை கிடைத்தாலும் சந்தோசம் கொடுப்பதில்லை... அன்பு கூடத்தான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.